# ஆற்றல்

International
Current Affairs

15

## சர்வதேச
## சமகால செய்திகள்

## -ஆய்வுகள், அபிப்பிராயங்கள், பின்னணிகள்-

ஆதாரம்

* TIME
* NEWSWEEK
* ASIAWEEK
* ECONOMIST
* READER'S DIGEST
* SPORTSTAR
* BBC — London, UK
* VOA — Washinaton, USA
* DW — Cologne, Germany
* RN—Hilversum, N'land

உள்ளடக்கம்


O 03 சர்வதேச சமகால செய்தி
O 11 Sports Stories - English
O 19 இணையம்
O 24 மூழ்காத கப்பல் - Titanic
O 30 VOA Science Report
O 32 காப்புறுதி
O 37 இலங்கை வங்கி
O 39 ஏன்...எப்படி???!!


## பொது அறிவு - சர்வதேச செய்தி

54 பக்கம்

10/-

# ஒரு நிமிடம் . . . .

எமது சென்ற இதழ் வடிவமைப்பில் மாற்றம் கொண்டு வெளி வந்தது. அச்சக உரிமையாளருக்கு ஏற்பட்ட அனர்த்தத்தினால் ஓர் தவறு ஏற்பட்டுள்ளது.

சென்ற இதழ் எமது 14 வது வெளியீடாகும். இதற்குப் பதிலாக இலக்கம் 01 என அச்சிடப்பட்டுள்ளது.

இப் பிழைக்கு முழுப் பொறுப்பும் ஆசிரியரை மட்டுமே சாரும்.

இப் பிழையினால் வாசகர் மத்தியில் வியப்பு ஏற்பட்டுள்ளது. ''ஏன்ooooஎப்படி'' பகுதியினது 13 வது கடிதம் ஓர் உதாரணம்.

வடிவம் மாறினாலும், ''ஆற்றல்'' முன்னைய இதழ்களின் தொடர் என்பதை உறுதிப்படுத்தும் இவ் வேளை, எனது தவறுக்கு உங்களது மன்னிப்பைக் கோரி நிற்கின்றேன்.

இவ் இதழின் இலக்கம் 15 ஆக உள்ளது.

நிற்க, பல அன்பு வாசகர்கள் கவிதை, கட்டுரை, சிறுகதை எனப் பல அனுப்பியுள்ளனர். இவற்றிற் சிலவற்றை எம்மால் ஏற்றுக் கொள்ள இயலாதுள்ளது.

எமக்கு எழுதும் போது, எமது கொள்கை ''பொது அறிவை'' யும், ',ஆங்கில ஆற்றல்'' லையும் மாணவ சமுதாயத்தில் பரப்புவதே என்பதை மனதிற் கொள்ளுங்கள்.

நிற்சமயமாக, தனியாகப் பாடங்கள் கற்பிப்பது எமது நோக்கம் அல்ல. அதற்குரியோர் அப்பணியை செவ்வையாகச் செய்வர்.

தங்களது ஆக்கங்களை வரவேற்கின்றோம்.

எழுத்துலகில் பிரவேசிக்க விரும்புவோர் எழுதுங்கள், ''ஆற்றல்'' உங்களை ஆதரிக்கும்.

உங்களுக்கென உருவாகிய சஞ்சிகையே ''ஆற்றல்'' எழுதுவோர், பதில் எதிர்பார்ப்போர், தபால் முத்திரை ஒட்டிய கடித உறை தவறாது அனுப்பவும்.

நன்றி,

ஆசிரியர்.

# சர்வதேச சமகால செய்திகள், ஆய்வுகள், அபிப்பிராயங்கள், பின்னணிகள்.

*(1) ஜேர்மனி — சென்ற இதழில் (இலக்கம் 1 என தவறுதலாக வெளிவந்த 14 வது 'ஆற்றல்'') ஜேர்மனி நாட்டு முன்னாள் அதிபர் கெல்மற் கோல் லினது வீழ்ச்சியை அறிவித்தோம். அதன் விபரங்களை இப்போது பார்ப்போம்.*

Adolf Hitler *7,000,000 யூதரைக் கொன்றெரித்த பின் இரண்டாம் உலக யுத்தம் 1945-ம் ஆண்டு முடிந்தது ஜெர்மனி நாட்டை 04 கூறுகளாகத் துண்டாடினர். ஐக்கிய அமெரிக்கா மேற்கு ஜேர்மனியையும், கொம்யூனிச றஷ்யா கிழக்கு ஜேர்மனியையும், பிரான்ஸ், பிரித்தானியா ஆகிய இரண்டும் சிறு நிலப்பரப்புகளையும் நிர்வாகித்து ஆண்டனர்.*

*சிறிய நிலப்பரப்புகள் இரண்டும் சொற்ப காலத்தின் பின்னர் ஐக்கிய அமெரிக்காவினது மேற்கு ஜெர்மனியுடன் இணைந்தன.*

*கிழக்கு ஜேர்மனி க்குள் இருந்த 90 மைல் நீளமான பெர்லின் நகரத்தையும் இரு கூறாகப் பிரித்து ஐக்கிய அமெரிக்கா மேற்கு பேர்லின் நகரத்தையும், கொம்யூனிச றஷ்யா கிழக்கு பேர்லின் நகரத்தையும் நிர்வாகித்தனர்.*

*அமெரிக்காவினது உதவியுடன் மேற்கு ஜெர்மனியும், மேற்கு பேர்லின் னும் பொருளாதாரத்தில் அபிரிதமான முன்னேற்றமடைந்தன. கிழக்கு மிகவும் மோசமான நிலையில் பின்தங்கியிருந்தது. கிழக்கில்* Erick Honecker *(எறிக் ஹொனிக்கர்) பல வருடகாலமாக சர்வாதிகாரியாக ஆட்சி புரிந்தார்.*

*கொம்யூனிச றஷ்யா வில் ஜனாதிபதி நிக்கிரா குறுஷேவ் ஆட்சி புரிந்த காலத்தில் பொருளாதார முன்னேற்றம் காணாத கிழக்கு ஜேர்மனி, கிழக்கு பேர்லின் மக்கள் மேற்கு பேர்லின் க்கும், மேற்கு ஜேர்மனி க்கும் தப்பியோடினர். இது கொம்யூனிச ஆட்சியாளர்களுக்குப் பெரிய அவமானமாக இருந்தது.*

*பேர்லின் நகருக்குக் குறுக்காக உயரமான மதில் ஒன்றைக் கட்டினர். காவல் அரண்களை அமைத்தனர். நிலக் கண்ணி வெடி*

களும் மதில் அருகே விதைத்தனர். தப்பி ஓடுவோரை துவக்கினால் சுட்டு வீழ்த்தவும் இராணுவச் சிப்பாய்கள் பணிக்கப்பட்டனர். ஆயி ரக்கணக்கான மக்கள் உயிர் நீத்தனர்.

றஷ்யாவில் மிக்காய்ல் கொர்பசேவ் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதும் பொது மக்கள் சிறிது சிறிதாக ''தனிமனிதச்'' சுதந்திரம் அனுபவிக்கத் தொடங்கினர். இதன் காரணமாக ''மக்கள் பலத்தால்'' 1989-ல் பேர்லின் சுவர் தகர்த் தெறியப்பட்டது. இரு ஜெர்மனிகளும் ஒன்றிணைக்கப்பட்டது.

இவ் ஒன்றிணைப்பினை சான்ஸலர் கெல்மற் கோல் தான் வழி நடத்தினார். தேசிய குடிமகனாக புகழாரம் சூட்டப்பட்டார். சுமார் 25 வருட காலமாக தனது Christian Democratic Party க்கு தலைவ ராக கடமையாற்றினார். 1999-ல் Gerhard Schroder (ஜேர்காட் ஷ்றூடர்) தலைமை வகிக்கும் Social Democratic Party யிடம் தேர்தலில் தோல்வியுற்றதால் கெல்மற் கோல் ''சான்ஸலர்'' பதவி யை இழக்க நேரிட்டது.

கெல்மற் கோல் தனது கட்சிக்காக தேர்தல் காலத்தில் இரக சியமாக பெரும் தொகையான பணத்தை பெற்றுக் கொண்டார் என்றும், இவரது ஆட்சிக் காலத்திலேயே அரசியல் கட்சிகளது நன் கொடைகள் சம்பந்தமாக இயற்றிய சட்டங்களை இவரே மீறியுள் ளார். எனவும் அம்பலமாகியது

இவரே தேர்ந்தெடுத்த தனது CDU கட்சியின் தலைவரான வுல்ப்கான்க் ஷோபிள் என்பவர் தான் ஒரு ஆயுத விற்பனையாள ரிடம் இருந்து 52,000 டொலர் பெற்றதாக ஒப்புக்கொண்டு தலை குனிந்தார்.

CDU கட்சியின் கணக்குகளை ஆய்வு செய்த நிறுவனம் 5,000,000 டொலர் பணம் கட்சிக்கு எங்கிருந்து கிடைத்தது என் பதை அறிய முடியாதுள்ளது என அறிவித்துள்ளது. 1980 களில் 4,000,000 டொலர் பணம் சுவிஸ் வங்கிகளில் இரகசியக் கணக்குகளில் வைப்புச் செய்துள்ளது, எனவும் அறிவித்தது.

மான்பிரெட் கான்தர் உள்நாட்டு விவகார மந்திரியாக இருந் தார். ஜெர்மன் சமுதாயத்தில் இருந்து ஊழலை முறியடிப்பேன் என சூளுரைத்தார். ஆனால், இந்த இரகசிய பண விவகாரத்தில் இவரே முதன் முதல் குற்றவாளியாகக் காணப்பட்டு, தனது பாராளுமன்ற உறுப்பினர்ப் பதவியை இராஜினாமா செய்தார். படிப்பது தேவாரம், இடிப்பது சிவன்கோவில் என்பர்!

கார்ல் ஹெய்ன்ஸ் ஷிறீபர் என்னும் ஆயுத விற்பனையாளர் ஒரு சூட் கேஸினுள் 5,000,000 டொலரைத் திணித்து CDU கட்சியின் பொருளாளரிடம் சுவிஸ் நாட்டில் கையளித்தாராம். இக் கதை வெளியாகியதும், கெல்மற் கோல் இவ்வாறு பெற்ற பணத்தினால் தனது ஆட்சிக் காலத் தீர்மானங்கள் ஒருபோதும் பக்கசார்பாகவில்லை எனப் பிடிவாதமாக மறுத்தார். ஆனால் ஆயுத விற்பனையாளர் ஒருவர், ஜேர்மனியில் தயாரித்த 36 கவச வாகனங்கள் சவுதி அரேபியாவுக்கு விற்றபோது தான் பணம் கொடுத்ததாகக் கூறினார்.

அந்றே குளல்பி என்னும் மொறோக்கோ நாட்டவர் தான் 40,000,000 டொலர் பணத்தை CDU பிரதிகளுக்கு கொடுத்ததாகவும், இது கெல்மற் கோல் க்குத் தெரியும் எனவும் கூறினார்.

இவ்வளவு பணப் பரிமாறல்களில் சம்பந்தப்பட்டோரது பெயர்களை கெல்மற் கோல் கூற மறுத்துவிட்டார். சட்டத்திற்குப் புறம்பாகத் தான் நடந்திருந்தாலும், தனக்குப் பணம் தந்தோருக்குக் கொடுத்த "இரகசியம் காக்கும்" வாக்குறுதியை மீற மாட்டேன் எனப் பிடிவாதமாகக் கூறிவிட்டார்.

(2) விசர் மாட்டு நோய் B S E என சுருக்கி சொல்லப்படும் Bovine Spongiform Encephalopathy என்னும் நோய் ஐரோப்பிய மாடுகளுக்கு வந்துள்ளது. பிரித்தானியா (U K) நாட்டிலேயே 1986ம் ஆண்டு முதன் முதல் காணப்பட்ட இந் நோயை " Mad Cow Disease" என அழைத்தனர். இது மூளையை பாதிக்கும் ஓர் தொற்று நோய். மேற்கத்திய நாடுகளில் மாட்டு இறைச்சியே மக்களது முக்கியமான உணவு என்பது உங்களுக்கு தெரியும்தானே!

பிரித்தானியாவில் இருந்து இறைச்சிக்காக மாடுகளை இறக்குமதி செய்வதை France தடை செய்தது. U K நாட்டு மாடு வளர்ப்போரும் அரசாங்கமும் நிலை தடுமாறினர். பல லட்சக்கணக்கான இறைச்சிக்காக வளர்த்த மாடுகளைக் கொன்றழித்தனர். இறைச்சி விலை வீழ்ச்சியடைந்தது.

மாடுகளை இறக்குமதி செய்வதைத் தடை செய்தாலும் இறைச்சியையும், மிருகங்களின் தீவனமான Bone Meal (போன் மீல் அதாவது " எலும்பு உணவு " அல்லது "எலும்புத் தீன்" இறக்குமதியை தடை செய்யவில்லை.

B S E நோயானது மூளையை பாதிப்பது. Bone Meal தயாரிப்பில் மாட்டினது இறைச்சியைத் தவிர ஏனைய பாகங்களை பாவிக்கப் படுகின்றன. அதாவது எலும்பு, தோல்' குடல், மூளை என சகல

பாகங்களும். இந்த எலும்புத் தீனியை உணவுடன் கலந்து கொடுத்தால் மாடு நன்றாகக் கொழுத்து, கூடிய நிறை பெறுமாம். ஆனால் B S E நோயுற்று இறந்த மாட்டினது மூளை மூலம் இந்த நோயின் வைறஸ் பரவக்கூடும் என்பதைக் கவனிக்காது போயினர்.

பிரான்ஸ் நாட்டிலும் மாடுகளுக்கு இந் நோய் பரவியது. நான்கு வருடங்களின் பின்னரே 1990ல், U Kயில் இருந்து உயிர் மாடு, இறைச்சி, எலும்புத்தீன் இறக்குமதியை முற்றாகத் தடை செய்தது பிரான்ஸ் அரசாங்கம்.

ஆனால், நோய் பதினொரு ஐரோப்பிய நாடுகளுக்குப் பரவி விட்டது. இந் நோயை தடுப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்காத குற்றச்சாட்டினால் ஜேர்மனியினது சுகாதார அமைச்சரும், விவசாய அமைச்சரும் ஜனவரி மாதம் பதவி விலகினர்.

ஐரோப்பியாவில் இருந்து இறைச்சி இறக்குமதியை (Australia) (ஒஸ்றேலியா) வும் New Zealand (நியூஸீலண்ட்) டும் இந்த வருட ஜனவரி மாதம் தொடக்கம் முற்றாகத் தடை செய்துள்ளன.

BSE நோய்வாய்ப்பட்ட மாடுகளின் இறைச்சியை உண்பதால் மனித குலத்திற்கு Creutzfeldt — Jakob Disease (CJD) என்னும் தொற்று நோய் BSE வைரஸ் ஆல் உருவாகின்றது இந் நோய் மூளையைத் தாக்குகின்றது. மருந்து கிடையாது. மூளையில் புள்ளிப் புள்ளியாக ஓட்டைகள் உருவாகி, அங்க அவயங்கள் செயலற்று, ஒரு வருட காலத்தினுள் நோயாளி மரணிப்பர். இந்த வைரஸ் தொற்றினால் 10 வருடங்களுக்கு செயலற்று இருந்த பின்னர், ஒருவரை தாக்கக் கூடுமாம்.

UK யில் 98 நபர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் மக்கள் நோயாளராகியுள்ளனர். பாதிக்கப்பட்டோரது குடும்பத்தினர் தத்தமது அரசாங்கங்களில் பெரிதும் விசனமடைந்துள்ளனர். அரசியல் காரணத்துக்காக தக்க தருணத்தில், போதிய விளக்கங்கள், மக்களுக்கு விளம்பரப்படுத்தத் தவறிய குற்றத்தை மன்னிக்க முடியாதென்கின்றனர். குதிரை ஓடிய பின் லாயத்தின் கதவை மூடி என்ன பயன் என்பதே கேள்வி!

(3) கொம்பியூரர் Program செய்யும் கொம்பனியான Micro Soft உரிமையாளர் Bill Gates 100,000,000 டொலர் பணத்தை Aids நோய்க்கு தடை மருந்து (Vaccine) கண்டு பிடிப்பதற்கென ஆய்வு கூடங்களுக்கு நன்கொடையாகக் கொடுக்க முன்வந்துள்ளார்.

இவரே உலகத்தினது மிகக் கூடிய தனவந்தர்.

இதே போன்று Yahoo தொடர்பு ஸ்தாபனமும் 04 மிலியன் டொலர் கொடுக்கவுள்ளது.

*(4) குஜராத், இந்தியா:- 2001 ஜனவரி மாதம் நில நடுக்கத்தினால் கட்டடங்கள் இடிந்து விழுந்து சுமார் 30,000 மக்கள் உயிரிழந்தனர். 40,000 பேர் காயமுற்றுள்ளனர்.*

*சர்வதேச நாடுகள் பணமாகவும், பொருட்களாகவும் நிபுணர்களது ஆலோசனையாகவும் கொடுத்து உதவுகின்றன.*

*இம் மாநிலத்திலேயே மகாத்மா காந்தி பிறந்தார். நேர்மைக்கு இலக்கணம் படைத்த முன்னாள் இந்தியப் பிரதமரான லால் பகதூர் சாஸ்த்திரி யும் இங்கு தான் பிறந்தார். இவர் முன்பொருகாலம் போக்குவரத்து மந்திரியாக பதவி வகித்தார். ஓர் றெயில் (தொடர் வண்டி) விபத்தொன்று நடந்தது. 40 பேர் இறந்தனர். மேலும் பலர் காயமுற்றனர். மந்திரியோ 'தானே பொறுப்பு" எனக் கூறி தனது மந்திரிப பதவியை உடனே ராஜினாமா செய்தார். நேர்மையான உத்தம புருஷர்.* ( 48 ஆம் பக்கம் பார்க்க )

வி. எஸ். எஸ். சாப்பாட்டு
நல்லெண்ணெய்
V.S.S LUNCH GINGELLY OIL
சுகாதார முறையில் சுத்தமான நல்லெண்ணெய்
தயாரிப்பாளர்கள்.

தயாரிப்பாளர்:-
வ.ச.சுந்தரலிங்கம்
சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.

விநியோகஸ்தர்:-
ஸ்ரீ ரங்கன் களஞ்சியம்
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

021—2975

மங்கள நிகழ்வுகளை சிறந்த,
அதி நவீன, தொழில நுட்ப, வீடியோ கமராக்கள்
நவீன புகைப்படக் கருவிகள் மூலம்
**வர்ணக் கலவை (Mixing) புகைப்படங்கள்**
**கறுப்பு, வெள்ளை புகைப்படங்கள்**
**பிடித்திடவும்,**
உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்பு சேவையும்
துரித கதியில் பெற்றிடவும்.
021—2190

**அரவிந்** **வீடியோ புகைப்பட சேவை**

291, (431), நாவலர் வீதி. ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

**வி. எம். பரமநாதன்**
**அன் சன்ஸ்**
**47 , கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

தரமான பலசரக்கு பொருட்களை
உங்கள் தேவைக்கு ஏற்ப பெற்றுக்கொள்ள
உடன் விரையுங்கள்.

**V.M. Paramanathan & Sons**
47, K. K. S. Road, Jaffna.

# கால் ஆணி மருந்து

உள்ளங்காலில் பலருக்கு ஆணி போன்ற வளர்ச்சி யொன்று தோன்றியதும், அவர்கள் நடத்து உலாவ மிகவும் கஸ்டப்படுவதை அவதானித்திருப்பீர்கள்.

அவர்களுக்கு பல விதமான மருந்துகளை பாவிக்கும் படி சொல்லப்படும். அப்படியான வற்றில் கீழ்க்காணும் மருந் தும் ஒன்று. பாவித்த பின்னர், பலனை எமக்கு அறிவியுங்கள்.

– ஆசிரியர்.

உள்ளங் காலில் ஆணி வளர்வோர் இந்த மருந்தை உபயோசித்துப் பார்க்கலாம்: மருதோன்றி இலையுடன், ஒரு மஞ்சள் துண்டும், சிறுதுளி கறபூரம் சேர்த்து அரைத்து கால் ஆணியின் மேல் பூச வேண்டும்.

– நாகமணி மகேந்திரலிங்கம்


## செல்வம் ஸ்ரோர்ஸ்

330, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சகல விதமான ரெலிபோன்கள் TELEPHONES

- O கோட்லெஸ் போன்கள், Cordless Phones
- O இன்ரகொம் போன்கள், Intercom Phones
- O கான்ட் போன்கள், Hand Phones
- O மின் இணைப்பு இன்ரகொம் ரெலிபோன் இணைப்பு பொருட்கள் யாவும்
- O சகல விதமான றேடியோ வகைகள்
- O பற்றறி வகைகள்
- O மணிக்கூட்டு பற்றறி வகைகள்
- O போட்டோ பிரதி இயந்திரம்
- O லாமினேற்றிங் இயந்திரம்
- O Fax/பக்ஸ் இயந்திரம்

# காருண்யா
# கணணி சேவைகள்

உங்களுக்குத் தேவையான சகல விதமான தமிழ், ஆங்கில கணணி தட்டச்சு வேலைகளும், பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஆய்வுக் கட்டுரைகள், ஸ்ரென்சில் கட்டிங் மற்றும் றோனியோ வேலைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே நிறுவனம்

**காருண்யா கணணி சேவைகள்**

தொடர்புகளுக்கு:- **திரு. சி. அ. பாலசிங்கம்**
நந்தாவில், ஒழுங்கை, தாவடி, கொக்குவில்.

---

## இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன
## சகல காப்புறுதிக்கும்

ஆயுள் * சுகாதாரம் * வாகனம்
* நெருப்பு * களவு * கொன்றாக்ரேஸ் றிஸ்க்
* சிறுபிள்ளைகள் காப்புறுதி
* திருமணக் காப்புறுதி

இன்னும் பல காப்புறுதிகளுக்கும்

காப்புறுதி பற்றிய ஆலோசனைக்கும்,

தொடர்பு கொள்ள வேண்டியவர்:-

கொழும்பு:
**ச. சண்முகராசா**
(காப்புறுதி அமைப்பாளர்)
24. ஐ. பி. சி றோட்,
கொழும்பு – 06
ரொலைபேசி: 597651,
077-314747, 503229

யாழ்ப்பாணம்
**ச. சண்முகராசா**
(காப்புறுதி அமைப்பாளர்)
167/1, கோயில் றோட்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021-2784

# SPORTS STORIES With KENNARD UNCLE (02)

Kennard Uncle 70 வயது முதிர்ந்த, இளைப் பாறிய அரசாங்க உத்தியோகத்தர். இவர் தனித்து வாழும் ஓர் புத்தகப் புழு. இவருக்கு சிறு பிள்ளைகளில் மிகவும் பிரியம்.

அயலில் உள்ள பிள்ளைகளான Judy, Maxmy, Edith ஆகியோருக்கு இவர் சொல்லும் சுவை யான, உண்மைச் சம்பவக் கதைகள் இவை. இவற்றை நாம் இலகு ஆங்கிலத்தில் தருகின் றோம். கடுமையான சொற்களை தவிர்த் துள்ளோம்.

உங்களுக்கு பொது அறிவையும், ஆங்கில ஆற்றலையும் இக் கதைகள் வழங்கும்.

## Frank Worrel and his sportive Team

Kennard unele is in the sitting room reading the Daily News.

The inseparable trio walk in hailing in unison, "Good afternoon Ken uncle".

Ken uncle looks up from his paper and greets them, "Hello dears, come in, come in". He folds the paper neatly and places it on the paper stand, next to his sofa.

The girls take their seats in front of him. Maxmy to Edith. in sotto voce "See how neat and methodical he is".

"Uhmmooo", replies Edith, "Everything in its place. Neat and tidy".

"Ken uncle", began Judy in a beseeching tone, "Would you please tell us the story of Hansie Cronje!".

"The who?", interposed Maxmy, the ever curious one.

"The South African Captain man" replied Judy, very impatiently, "The one who got caught for match fixing!".

"That's sub judice, my dear", declared old Ken, "We will talk about a great West Indian cricketer today".

"What's sub judice? Ken uncle!", asked Edith.

"Sub Judice means", Ken uncle explained, "A case is before a Court, and we should not discuss it till the Court decides on it".

"OK uncle, you tell us the story", said Judy and looking at the other two, "Will you, both of you please, cut out your questions till Ken uncle finishes. OK!".

Maxmy mumbles, "All right, all right" and winks at Edith.

Kennard uncle enjoys the interplay between the trio and smiles. The girls look at him in anticipation.

"West Indies, children, are a group of Islands, in the Caribean Sea, in South Atlantic Ocean.

"They were British Colonies and were peopled by Africans of Slave Trade, to work in Sugar Plantations, and migrants from India as Traders.

"The Britishers, wherever they went, they introduced, their English language and also their National Game: Cricket.

"Just as much as they did in India, Pakistan, Sri Lanka; why even in Australia and NewZealand too.

"Likewise, English and Cricket were made known in the West Indies too.

"Though great Players were produced in West Indies they seldom won matches."

''Why is that Ken uncle?'', asked Maxmy eagerly.

''Basic, Maxmy dear'', explained Ken uncle, ''Cricket is a team game and for a team to win there should be unity within the players''.

''True'', ''Oh, yes'', ''Ofcourse'', the Trio uttered softly with emphatic nods.

''The West Indies Cricket Test Teams were selected from various local, rival sides: Trinidad, Antigua, Barbados, Windward Islands, Leeward Islands etc'', continued Kennard uncle.

''Internal politics, petty jealousies, kept the players, from different Islands, apart from each other.

''Though they lost matches, they produced some wonderful players.

''In the fifties they had the 'Three Great Ws'' Clyde Wallcot, Everton Weekes, and Frank Worrel.

''Once, the big made, Clyde Wallcot hammered an 'off drive'' to six. The ball shot from the bat and crossed the boundary line, without ever rising more than six inches from the ground. Such was the power of his off drive.

''On another occasion, Everton Weekes batted in the burning hot, Equatorial, sun for continuous thirteen long hours in two days. Such was his power of endurance and concentration.

The awe struck kids. ''Ah'', ed and 'Ooh'', ed.

''And the youngest of the trio'', continued Kennard uncle, ''was the erudite Frank Worrel who captained the West Indies in the sixties. It was he who moulded them into a united team. And they were invincible champions for the next ten years.

''In the sixties West Indies were playing a Test Series in Australia.

''If I remember correct'', supposed Ken uncle, ''the Test Match was at Melbourne grounds.''

''Basil Butcher and Frank Worrel were batting. Worrel, the Captain, was at the Bowler's end, while Butcher was facing the bowler.

"Butcher leaned forward and played straight, a fast, well pitched ball. But missed, yet slightly snicked a catch.

"The wicket-keeper neatly collected the ball and there was a loud appeal "Howzzzat" from every in-fielder.

"The ball never deviated from its path. The wictket keeper did not move at all from his position to collect the catch.

"The Umpire was dismayed. The crowd was stunned. Basil Butcher was nonchalant He did not walk away, but stuck to his crease. Tension was mounting. The Umpire truly could not decide.

" Butcher was unconcerned of all activities around him. Fielders cursed, The Wicketkeeper stood, planted like a statue, with his gloved right hand, holding the ball, raised to heavens, with an expectant stare at the Umpire.

"The Umpire was flabbergasted.

"In the meantime, Butcher calmly bent down, picked up a pebble from his batting crease and tossed it away. He was all innocence.

"What could the Umpire do? Give the benefit of the doubt,, as usual, to the Bastman?!

"Sundenly Frank Worrel from the opposite end, addressed the Bastman:

"Hey Butcher, you're out."

"How Skipper?", was the calm response.

"Caught behind", was the terse reply.

"Thank you, Skipper" said Butcher and straight away began his walk back to the Pavilion; with a mischevous smile, like a small boy caught with his hand in the sweet' bottle.

There was a spontaneous clapping of hand by the Australians on the field and most of them shook Worrkl by the hand.

"In a little while, the spectatos caught the drama being played on the field, and a great

applause resounded the stadium'', concluded Ken uncld.

The three kids were listening with rapt attention.

''OK yougn ladies'', Ken uncle addressed them, ''come again tomorrow ooo **I'll tell** you another Sports Story''.

As the three of them were almost out of the sitting room, Ken uncle said to them, ''By the way, the first ever tied Test Match was between these two Test Teams''.

''Tied Test Mateh, uncle?, asked Maxmy meekly.

''Drawn match, you silly goose'', Judy said playfully as they skipped out of the house, ''both teams scorsd the same score''.

புதுமையும்
எழிலும்
பொழிவும்
கொண்ட பட்டுப் பருத்தி
ஜவுளி ரகங்களின் காட்சி அறை

**சிவகணேசன் ஸ்ரோஸ்**
**41, பெரியகடை, யாழ்ப்பாணம்.**
☎ இல:- 2063

Sir Frank Mortimer Maglinne Worrel மேற்கிந்தியதீவான Barbados இல் *01-08-1924* இல் பிறந்தார். 17 வது வயதில் தனது தீவினது அணியில் உள்நாட்டுப் போட்டிகளில், இடது கை சுழல் பந்து வீச்சாளராக விளையாடத் தொடங்கினார்.

வலது கை துடுப்பாட்டக்காரரான இவர் 1947 இல் Jamaica தீவில் வசிக்கத் தொடங்கி, அங்கு இங்கிலாந்து அணிக்கெதிராக விளையாடத் தெரிவானார்.

இங்கிலாந்து Manchester University யினது B A பட்டதாரி யான இவர் 1964 இல் Sir பட்டம் பெற்றார். ஜமேய்க்கா தீவில் " ஸெனற் சபை " (Senate) உறுப்பினராக செயலாற்றினார்.

மேற்கிந்திய வெவ்வேறு தீவுகளினது கலாச்சார பிரிவினை களால் பாதிக்கப்பட்ட கிறிக்கற் வீரர்களை ஒன்று திரட்டி, ஒற் றுமையாக, ஒரே அணிக்காக விளையாடும்படி உருவாக்கினார். இத னால் அவர்கள் சுமார் பத்து வருடங்களாக சகல அணிகளையும் தோற்கடித்து, உலக சம்பியன்களாகத் திகழ்ந்தனர்.

இங்கு குறிப்பிட்டுள்ள Basil Butcher சம்பவம் நடந்த Series இல் தான் முதன் முதலாக ஒரு Test Match இல் இரு அணிகளும் சமமான Score எடுதத்தால் Draw வில் Match முடிந்தது.

இவ் இரு விடையங்களையும் விபரித்து எழுதி, Frank Worrel லையும் அவரது தலைமையின் கீழ் ஒற்றுமையாக விளையாடிய மேற் கிந்திய வீரர்களையும் போற்றாத நாளேடுகளோ சஞ்சிகைகளோ, அந்நாட்களில் இருக்கவில்லை.

Cricket உலகில் Sportsmanship ற்கு உதாரணமாக விளங் கிய இவ் உத்தமர், 43 ஆம் வயதில், Leukaemia நோயினால் பாதிக் கப்பட்டு 13 – 03 – 1967 ஆம் திகதி மரணமானார்.

கறுப்பு இனத்தவரான Frank Worrel, ஆங்கிலேயரது Cricket ஆட்டத்தை ஆடும்போது பேணப்பட வேண்டிய பண்புகளுக்கு இலக் கணம் படைத்தார்.

தற்போது Cricket இல் ஈடுபடும் பண்பான வீரர்கள், ஆடு களத்தில் சோதனைக்குட்படும் சந்தர்ப்பங்களில், Frank Worrel ய் நினைவு கூர்ந்து Sportive ஆன தீர்மானங்கள் எடுப்பது Cricket இல் அவர் காட்டிய உண்மை, நேர்மை, தோழமை ஆகியவற்றை நினைவுபடுத்துகின்றன.

Frank Worrel லது செயற்பாடுகள் இன்றைய விளையாட்டு வீரர்களுக்கு உதாரணமாகத் திகழ்வதில் ஐயமில்லை. O

# இலங்கையில் தற்கால கல்வித் திட்டம் மாணவர்களை யதார்த்த வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துகின்றதா?

- வா. கலாதரன் -
*(அளவெட்டி)*

*முன்பு: (1)* Tuition இல்லை. Tuitionக்கு போவோர், பின் தங்கிய மாணவர் என இழிவாகக் கணிக்கப்பட்டனர்.

(2) பாடங்கள் விரிவாக இல்லாது போனாலும், பொது அறிவை வளர்ப்பதாக இருந்தது.

(3) மாணவர் கேள்விகள் கேட்பதை ஆசிரியர்கள் உற்சாகப்படுத்தி வரவேற்றனர். இதனால் அறிவு வளர்ந்தது.

(4) பொது அறிவு வளர்ச்சிக்காக: வாரத்திற்கு, பாடத்திட்டத்தில் இல்லாத, ஒரு புத்தகம் வாசிப்பது; பொழுது போக்கு விடயங்களான, பேனா நண்பர் தொடர்பு, தபால் முத்திரை சேகரித்தல், (இது பூமி சாஸ்த்திர அறிவை வளர்ப்பது), விளையாட்டு வீரர் படம் சேகரித்தல் ஆகியவற்றில் ஈடுபட நேரம் இருந்தது.

(5) படிப்பில் கவனம் செலுத்தும்போது, விளையாட்டுத்துறையிலும் பங்குபற்ற நேரம் இருந்தது.

(6) 8-ம் வகுப்பில் இருந்தே கடிதம் எழுதவும், கூட்டங்கள் நடாத்தவும் வகுப்பில் பயிற்சி தரப்பட்டது.

(7) ஆசிரியர் ஊக்கமெடுத்துப் படிப்பித்தார். இவர்களை மாணவரும், பெற்றோரும் கனம் செய்து மதித்தனர். இவர்கள் கல்வி ஊட்டுவதை தொழிலாகக் கருதாது, தாம் விரும்பித் தேர்ந்தெடுத்த கடமையாகக் கருதினர்.

(8) அன்று, மாணவர் பொது அறிவு உள்ளோராகவும்; சுயமாகச் சிந்திப்போராகவும்; பிறர் சிநேகிதம், கருணை, சந்தர்ப்பத்தை உணர்ந்து தாமாகத் தீர்மானிக்கக் கூடிய சிந்தனை உள்ளோராகவும்; வயதில் மூத்தவர்களை கனம் செய்பவர்களாகவும் உருவாகினர்.

இன்று: (1) பெற்றோரின் மனப்பாங்கு என்னவென்றால் பிள்ளைகளால் நிறைவேற்ற முடியாத இலட்சியத்தை பிள்ளைகளிடம்

திணிப்பதே. அதாவது, தமது பிள்ளைகள் உயர்ந்த உத்தியோகங்களை அடையவேண்டுமென வற்புறுத்தி, ஒரு பாடத்தைப் படிப்பதற்கு பல ரியூஷன் நிலையங்களுக்கு அனுப்புகின்றனர்.

(2) அநேக ஆசிரியர்கள் பாடசாலைகளில் பாடவிதானச் செயற்பாடுகளை நிறைவு செய்கின்றனர். ஆனால், பிரத்தியேக ரியூசன் வகுப்புகளை நடாத்தும் ஒரு சில ஆசிரியர்கள், தமது வகுப்பில் கற்கும் மாணவர்களை மேலதிக விளக்கங்கள் தேவையானால் தமது ரியூசன் வகுப்புகளுக்கு வருமாறு வரவேற்கின்றனர்.

(3) முன்பு ரியூசனுக்கு செல்லாது பாடசாலை கற்பித்தலுடன் கல்வி கற்ற பெற்றோரே இன்று தமது பிள்ளைகளைப் பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகள், சாரணர் குழு, பாடசாலையினது விவாதக் குழு போன்றவற்றில் தமது பிள்ளைகளை ஈடுபாடு கொள்ள விடுவதில்லை. படிப்புக்கெட்டுப் போகுமாம்.

(4) பரீட்சைகளில் உயர்ந்த புள்ளிகள் பெற்று சித்தியடைய வேண்டுமென்ற எண்ணத்தினால், குறிம்பிட்ட பாடங்களை மாத்திரமே படிக்கும்படி பெற்றோர்கள் தமது பிள்ளைகளை வற்புறுத்துகின்றனர்.

(5) இதனால், அப்பிள்ளைகள் "சூழல் அறிவு" இன்றிபரீட்சையில் சித்தியெய்துகின்றனர். உதாரணமாக பாடசாலை சாரணர்குழு, விளையாட்டுக்குழு, விவாதக்குழு, விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றில் பங்கு கொள்ளாத மாணவர்கள்: சமுதாயத்தில் பிறருக்கு உதவுதல், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, வெற்றி தோல்விகளை சமமாக மதித்தல் போன்ற பண்புகள் இல்லாதவர்களாகவே காணப்படுகின்றனர்.

இன்று பாடங்களில் சித்திபெறும் நோக்கத்தோடு கற்கும் மாணவர்களிடம் போட்டியும், பொறாமையும் ஏற்படுவதை அவதானிக்கக்கூடிங்தாகவுள்ளது. இதனால், பொது அறுவு இல்லாது, பரீட்சையில் சித்தியெய்தியமைக்காக வெறும் சான்றிதழ்களைக் கொண்டுள்ளனர்.

(7) எனவே தற்போது (உயர்தர) பரீட்சையில் "பொது அறிவு" முக்கிய பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழகம் செல்ல விரும்புவோர் விதிவிலக்கில்லாது, கட்டாயமாக பொது அறிவு + நுண்ணறிவு ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய பொது உளச் சார்பு பாடத்தில் சித்தியடைய வேண்டுமென்ற நிலை இன்று உள்ளது.

இச் சிறப்பு நிலையினாலேயே 'பொது அறிவு' உள்ள பட்டதாரிகளை உருவாக்க முடியும் என்பதே பாடத்திட்டத்தை அமைத்த கல்வி அதிகாரிகளது தீர்க்கமான முடிபு. O

# இணையம்

செல்வம் அல்ல, சேவையே பெரிது. உலகத்தை ஒரு வலைக்குள் அடக்கி, மூலைக்கு மூலை தொடர்பு ஏற்படுத்த, கணப்பொழுதில் செய்திகளைப் பரிமாற உதவும் பாரிய Electronic மூளையைக் கண்டு பிடித்தவரிடம், வியத்தகு அபார மூளை இருக்கும் என எதிர்பார்ப்பது இயற்கையே!

Tim Berners - Lee, 44, என்பவரே, World Wide Web எனும் இணையத்தை உருவாக்கியவர். அமெரிக்காவில் வசிக்கும் British பிரஜையான இவர் Oxford பல்கலைக்கழகத்தினது பௌதீக வியல், முதல் தர, பட்டதாரி. மூளைசாலி தான்! ஆனால், ஒரு குறை, பொதுவாக நாம் மனதில் இலகுவாக வைத்திருக்கும் சாதா ரணமான விஷயங்களை, இணையத்தின் காரண கர்த்தாவினது மன திலிருந்து அவ்வப்போதே அழிந்துவிடும்.

ஒருவரது பெயர், அவரது முகம், முதன் முதல் அறிமுகமான சந்தர்ப்பம். ஆகியவற்றை மறப்பது சில சமயங்களில் பெரும் தர்ம சங்கடமாக இருக்கும். இவ்வகையான மறதியே அவரது பெருங் குறை.

''யாவும் நன்மைக்கே'' என்பது போன்று, இக் குறையே ஓர் வரப்பிரசாதமாகியது.

ஐரோப்பாவினது பௌதீகவியல் ஆய்வுகூடம் CERN நிறு வனத்தினரது அழைப்பை ஏற்று, ஆறு மாத ஆலோசனைச் சேவை புரிய 1980 ஆம் ஆண்டு Switznrland சென்றார். அங்கு பற்பல, விதம் விதமான, சிற் சிறிய விஷயங்களை மனதில் வைத்திருக்க இய லாது திண்டாடினர்,

அப்போது தான், தனது பிரத்தியேக பாவனைக்கென Enquire என்னும் ''பதில் — ஞாபக'' Program ஒன்றினை எழுதினார். இதன் பிரகாரம், ஓர் சொல்லை Type செய்தால் அது சம்பந்தமான ஏனைய சகல சொற்களும் வரும். அவற்றில் தேவையானதை Click செய்தால், விரிவான விளக்கத்துடன் தேவையான வெவ்வேறு விஷ யங்கள் கிடைக்கும். Berners — Lee யினது மறதிக் குறை நீங்கியது. Web இணையத்திற்கு வித்திடப்பட்டது.

# மூழ்காத கப்பல்: Titanic

## By R. S. Aravinth, Paris, France

Titanic என்னும் அண்மையில் வெளிவந்த ஆங்கிலப் படத்தைப் பார்த்திருப்பீர்கள். பதினொரு Oscar Award கள் பெற்றது, இப் படம். இதனது பின்னணிக் கதையே இதற்கு மெருகூட்டியது.

முன்பு, 1960 -ம் ஆண்டுகளில், கறுப்பு-வெள்ளைப் படமாக ''Titanic'' என்னும் படமும் வெளிவந்தது. இப்படத்தில் பின்னணிக் கதை எதுவும் இருக்கவில்லை.

இவ் விரு படங்களைத் தவிர, ஆயிரக் கணக்கான கட்டுரைகளும் புத்தகங்களும், இக் கப்பலினது கதையை விபரித்தன.

இவ்விரு படங்களும், கட்டுரைகளும், புத்தகங்களும் ரைரானிக் மூழ்கியதற்குக் கூறிய காரணம் ஒன்றே அதாவது, ரைரானிக் ஓர் பாரிய பனிக்கட்டிப் பாறையில் மோதியது என்பது தான்.

ஆனால், வேறு இரு காரணங்களும் உள்ளன. ஒன்று விஞ்ஞான ரீதியானது. மற்றையது, சற்று விசித்திரமானது, ஆவி உலகை மைய மாகக் கொண்டது. பார்ப்போம்!

''ஆண்டவன் விரும்பினாலும் இக் கப்பலை மூழ்கடிக்க முடியாது'' என இக்கப்பலது Captain (கப்ரன்) Edward T. Smith வெள்ளோட்டத்தன்று கூறினாராம்.

இப் பிரமிதத்தின் காரணம், ரைரானிக் கினது அடித்தளம் நீர் உட்புகாத 16 வெவ்வேறு பிரிவுகளாக அமைக்கப்பட்டதே!

யாதெனும் அசம்பாவிதத்தினால் ஓரிரு பிரிவுகட்குள் நீர் சென் றாலும், ஏனைய பிரிவுகள் கப்பலை மிதக்க வைத்துக்கொள்ளும். இதனாலேயே ரைரானிக் ''ஒருபோதும் மூழ்காத கப்பல்'' என சகலரும் கருதினர்.

இருபதாம் நூற்றாண்டினது முற்பகுதியில் கட்டப்பட்ட பயணிக் கப்பல்களுக்குள் இதுவே மிகப் பெரியது. ஆகாயக் கப்பல்கள் இல்லாத அக் காலத்தில் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் லட்ஷக் கணக்கானோர் நீராவிக் கப்பல்களிலேயே பயணம் செய்தனர்.

இந்த ரைரானிக் கப்பல் ஓர் சொகுசுக்கப்பல். 46,000 தொன் நிறையான இதனது கீழ்தளத்தில் சாதாரணப் பயணிகளும், மேல் தளங்களில் கோடீஸ்வரர் பிரமுகர் பயணம் செய்ய பல வசதிகள் செய்யப்பட்டிருந்தது. 269 மீற்றர் நீளமான இக் கப்பலில் பல நீச்சல் தடாகங்களும், Golf (கொல்ப்) விளையாட்டைப் பயிற்சி செய்யும் சிறிய மைதானங்களும், Ball Room Dance நடாத்தும் Hall களும், படங்கள் காண்பிக்கப்படும் தியேட்டர்களும், இசை நிகழ்ச்சிகள் நடாத்தப்படும் அரங்குகளும் அமைக்கப்பட்டிருந்தன. இதனது நீளத்தை இரு உதைபந்தாட்ட மைதானங்களுக்கு ஒப்பிடலாம் என்றால் நீங்கள் கற்பனை செய்து பாருங்களேன்!

ஆங்கிலேயரால் கட்டப்பட்ட ரைரானிக் இங்கிலாந்தின் Southampton (ஸதம்ரன்) துறைமுகத்தில் இருந்து 1912-04-10-ம் திகதி புறப்பட்டது. அமெரிக்காவினது New York (நியூயோர்க்) துறைமுகமே பயண இலக்கு. 1361 பயணிகள். 891 பணியாளர்கள். முதன் நான்கு நாட்களும் களியாட்டம் உல்லாசம் கலந்த சொர்க்கலோகம் தான்!

பதின்நான்காம் திகதி பனிப்பாறைகள் வட அற்லான்ரிக் (North Atlantic) சமுத்திரத்தில் மிதக்கின்றன எனக் கிடைத்த ரேடியோ எச்சரிக்கைச் செய்திகள் உதாசீனம் செய்யப்பட்டன. ரைரானிக்காவது, மூழ்கிறதாவது! சுத்த அபத்தம்!!

அன்றிரவு மேற் தளத்திற்குச் சென்ற ஓர் சிப்பந்தி மலை போன்ற உருவத்தைச் சமுத்திரத்திற் கண்டான். ரைரானிக் வேகமாக முன்னேற அவ்வுருவம் பெரிதாகத் தோன்றியது. வெகுண்டோடி, நடுத்தளத்தில் Billiards (பிலியட்ஸ்) ஆடிக்கொண்டிருந்த கப்டனிடம் மலைபோன்ற பனிக்கட்டிப் பாறையை விளக்கினான்.

கப்ரனும் துரிதமாக உத்தரவுகளைப் பிறப்பித்து, கப்பலை திசை திருப்பி, பனிக்கட்டிப் பாறையை விலத்த முயற்சித்தார். கப்பலும் திரும்பியது. நேரடியாக மோதவில்லை. இருந்தும் பக்கவாட்டில் சிராய்த்துச் சென்றது. அனைவருக்கும் அதிர்ச்சி. இருந்தும் கப்ரனது அமைதியான ஆறுதல் வார்த்தைகள் சகல தளங்களிலும் ஒலிபரப்பக் கேட்டதும், அனைவரும் சடுதியாக நிறுத்திய கேளிக்கைகளைத் தொடர்ந்தனர். இசை வாத்தியங்கள் மீண்டும் இன்பமீட்டின. நடனமாடிய பயணிகள் இன்முகத்துடன் சோடிசோடியாக ஆடினர்.

அடித்தளம் சென்று பார்வையிட்ட பொறியியல் பணியாள், வெளிறிய முகத்துடன், கப்ரனிடம் 300 அடி நிழமான வெடிப்பின் மூலம் நீர் கப்பலினுள் வருகிறது, ஏற்கனவே பதினொரு அடி உயரத்திற்கு நீர் நிறைந்து விட்டது, சுமார் இரண்டு மணி நேரத்தில்

மஸெசுஸெற்ஸ் மாநிலத்தின் MIT நிறுவனத்தில் ஏழ்மைத் தோற்ற மான, கவர்ச்சியற்ற ஓர் சிறுய அறையினுள்ளேயே இயங்குகின்றனர். Berners – Lee தனது இணையத்திற்குப் பெயர் சூட்ட எ ணிய காலத்தில்... இவரது மனைவியும், சகாக்களும் இவரைக் கேலிபண்ணி நையாண்டி செய்தனர்

World Wide Web என்பதன் சுருக்கம் WWW என்பது இதில் முழுமையான பெயரை உச்சரிப்பதிலும் பார்க்க, சுருக்கத்தை உ சரிப்பதற்குக் கூடிய நேரம் எடுக்கின்றதே என்றனர்! உச்சரித்துப் பாருங்களேன்!!

— ஆதாரம்:— Time
May 19, 1997.

Sir Arthur C. Clarke, C B E ஓர் Britsh பிரஜை. இவர் தனது 20 -ம் வயதின் பிற்பகுதிகளில், 1945 ஆம் ஆண்டு, Satellite மூலம் தொலைத் தொடர்பு நடாத்தும் முறையை அறிவித்தார்.

இம் முவறயின் அடிப்படையிலே இன்று Satellite மூலம் TV, Radio, Phone, Fax, வெவ்வேறு இணையங்கள் தொடர்பு கொள்கின்றன. இவையது அதிசயநிலை மாறி இன்று சர்வ சாதாரணமாக எமக்குத் தோன்றுகின்றன.

Sir Arthur தற்பொழுது ஓர் இலங்கைப் பிரஜை. இவர் Moratuwa (Kattubede) பல்கலைக்கழகத்தினது துணைவேந்தர்,

இரண்டாம் உலக யுத்த காலத்தில் RADAR systems கருவிகளை அமைப்பதற்கு இவர் செய்த ஆராய்ச்சிகளுக்கும், Satellite தொடர்பு ஆராய்ச்சிகளுக்குமாக Royalty பணம் பெறு கின்றார்.

கடந்த 60 வருட காலமாக 90 நூல்கள், 600க்கும் அதிக மான கட்டுரைகள், சிறுகதைகள், எழுதியுள்ளார். இவரது கதைகள் சிலவற்றை நாம் வெள்ளித் திரையிலும் கண்டுகளித் துள்ளோம்.

Science Fiction (விஞ்ஞானக் கற்பனைக் கதைகள்) எழுதும் இவ் விற்பன்னர், பல சர்வதேசப் பரிசில்களையும் பெற்றுள்ளார்.

By Robert Wright in Time

# அரை லூஸ், முழு லூஸ்

''தர்க்க ரீதியாகச் சிந்திப்பது எப்படி'', என பேராசிரியர் விரிவுரையைத் தொடக்கினார்.

மேலும் தொடர்ந்து, 'நாடகம் ஒன்பது மணிக்குத் தொடங்கும், இரவுச் சாப்பாடு எட்டு மணிக்கு, எனது மனைவிக்கு ஆட்டுக்கறி பிடிக்காது, எனது தங்கை நன்றாக வயலின் வாசிப்பார்'', என நிறுத்தி...... சகலரையும் ஒவ்வொருவராக மிகவும் உன்னிப்பாகப் பார்த்தார்.

மேலும் தொடர்ந்து, ''அப்படியானால், இப்போது எனக்கென்ன வயது?'', என்று கேட்டு நிறுத்தினார்.

சற்றும் தாமதிக்காது. ''நாற்பத்தி நான்கு''. என்றான் ஒரு மாணவன். ஆச்சரியப்பட்ட பேராசிரியர். 'ஆகாooo என்ன யூகச் சக்தி''. எனப் போற்றி, ''உமது விடைக்கு நீர் எப்படி வந்தீர் என்பதை விளக்கும்'', என்றார்.

''மிகவும் இலகு'', என்றான் மாணவன் பெருமிதத்துடன், ''எனது மாமாவுக்கு இப்போது வயது இருபத்தி இரண்டு, அவர் ஒரு **அரை லூஸ்**; ஆகவேooo.'' என நிறுத்தினான்.

ரேவதி அம்பலவாணர் – பாலேந்திரன்
கிழக்கு, உரும்பிராய்

இவர் எழுதிய Program மினது எண்ணக் கரு புதிதானதொன்றல்ல. இதன் வடிவமைப்பினை Vannevar Bush என்பவர் 1945 இல் விபரித்தார். Ted Nelson என்பவர் 1960 களில் Xanadu Project என்னும் முறையை அறிமுகப்படுத்த முயன்றார். இவ் இருவரது முயற்சிகளும் எழும்பவில்லை. இருவரும் இலாபத்தை எதிர்பார்த்தனர். அதனால் பலவிதமான பிரச்சினைகள் கிளம்பின. தோல்வியே முடிவு.

Berners — Lee இலாபத்தை எதிர்பாராது, CERN ஆய்வு கூடத்தை அதனது அறிவு சம்பந்தமான உரிமைகளை விட்டுக் கொடுக்க இணங்க வைத்தார். வெற்றி கண்டார்!

இத் துறையில் இவர் இறங்குவதற்கு இயற்கையின் காரணங்களும் உண்டு. முதன் முதலாக வியாபார நோக்குடன் சந்தைப் படுத்தவென உருவாக்கப்பட்ட Computer ஆனது Feranti Mark I ஆகும் இதனை உருவாக்கியவர்கள் Berners — Lee யினது பெற்றோரே! புலிக்கு புலிதானே பிறக்கும்!!

ஞாபக சக்திக்கு உறுதுணையாக Enquire Program எழுதிய காலத்திற்கும், பத்து வருடங்களின் பின்னர் Web பிறந்த காலத்திற்கும் இடையில் உலகம் மாற்றம் கண்டிருந்தது. Internet உருவாகிவேரூண்டியிருந்தது. இருந்தும், பொது மக்களிடையே அறிமுகமாகாது, புத்திஜீவிகளது, விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களது, இராணுவ, (அமெரிக்கா) உயர் அதிகாரிகளது விவரங்களைப் பரிமாறும் தொடர்புகளை மட்டுமே இணைத்துக்கொண்டிருந்தது.

இரண்டாவது தடவையாக Berners — Lee 1989 இல் Cern ஆய்வுகூட நிறுவனத்திற்குச் சென்றார் அங்கு Internet உலகளாவிய Cern ஆய்வுகூடங்களை இணைத்தாலும், இச் சேவை ஏனைய பொது மக்களையும் இணைக்கவில்லையே, என எண்ணினார்.

என்னிடம் எந்நேரமும் கேள்வி கேட்போர் சகலரும், எனது Data Base ஐ வாசித்தால், அவர்களுக்குத் தேவையான விஷயங்களை, என்னை அணுகாமலேயே, தாமாகவே பெற்றுக்கொள்ளலாம். அதே போன்று, நானும் இவர்களது Data Base ஐ வாசித்து, இவர்கள் ஒவ்வொருவரும் என்ன, எப்போது, எப்படிச் செய்கின்றனர் என அறியலாமே எனவும் எண்ணினார். அதாவது சகலருக்கும் Enquire செய்யும் உரிமையையும், வல்லமையையும் பகிர்ந்தளிப்பதே நோக்கம்! இவ்வாறு பிறந்ததே World Wide Web — www — என்னும் இணையம்

Berners - Lee க்கு இதில் ஆர்வம் உருவானதற்குக் காரணம் ஓர் சிறு கதையே! Dial F for Frankenstein என்னும் விஞ்ஞானச் சிறு கதையை Arthur C. Clarv எழுதியிருந்தார். இக்கதையில் பலகணனிகள்

ஒன்றாக இணைக்கப்பட்டிருந்தன. அவை, தமக்குள் ஒன்றை ஒன்று கண்காணித்து. தத்தமது அறிவுத் திரட்டுகளைப் பகிர்ந்து, உயிர் பெற்றவை போலேச் சுவாசித்து, உத்தரவுகள் பிறப்பிக்கும் Operators உடைய உதவிகள் இல்லாமலேயே தாமாக இயங்கத் தொடங்கின, இவ் எண்ணக் கருவே உலகில் உள்ள பல்லாயிரக் கணக்கான கணனிகளை ஒன்றாக இணைத்து விஷயங்களைப் பரிமாற வழிவகுத்தது.

உதாரணமாக, Cambridge பல்கலைக் கழகத்தினது நூலகத்தில் உள்ள நூல் ஒன்றில் இருக்கும் Satellite சம்பந்தமான விஷயம் எமக்குத் தேவை, என எடுத்துக்கொள்வோம். இவ்விஷயத்தை அமெரிகாவினது Houston நகரில் இருக்கும் N A S A (விண்வெளி ஆராய்ச்சி நிறுவனய்) நிறுவனத்துடன் நாம் Cambridge இல் இருந்து பெறும் விஷயங்களை ஒப்பிட்டு உறுதிப்படுத்தவும் வேண்டும், என வைத்துக்கொள்வோம்.

நாம் ''WWW'' என்னும் இணைய தொகுப்பின் மூலம் எமது வீட்டில் இருக்கும் P C கணனியில் Cambridge நூலக கணனியை எழுப்புகின்றோம். 10 செக்கன்ட்ஸ். நூலக கணனி வந்ததும் Satellite விஷயத்தின் KEY யை கொடுக்கின்றோம். 05 செக்கன்ட்ஸ். எமது கணனியின் Monitor இல் (TV Screen இல்) எமக்குத் தேவையான விஷயங்கள் தோன்றுகின்றன. வாசிக்கின்றோம் 10 நிமிடம் எமது Printer இல் பிரதி ஒன்றை எடுக்கின்றோம். 02 நிமிடம். எல்லாமாக 12 நிமிடம் 15 செக்கன்கள். பின்னர் Cambridge நூலகத்தைத் தொடர்பு கொண்டது போல N A S A வினது Reference Section (உசாத்துணைப் பகுதி) எம்மால் எடுக்கப்படுகின்றது. நேர விரயம் ஒன்றேதான். விஷயங்கள் Monitor இல் தோன்ற, அவற்றை வாசித்த பின்னர், பிரதி எடுக்கின்றோம். இப்போது நாம் ஒட்டுமொத்தமாக 24 நிமிடங்கள் 30 செக்கன்கள் செலவில் இரு நிறுவனங்களிலும் இருந்து எமக்குத் தேவையான விஷயங்களைப் பெற்றுள்ளோம் பண விரயம்? நாம் ரெலிபோன் மூலம் கதைத்து பெறுவதிலும் பார்க்க மிகவும் சொற்பமான பங்கே செலவாகும்.

இதெப்படி? இங்கு தான் செல்வத்தைப் பெரிது பண்ணாது, சேவையே நோக்கம் என இயங்கும் Tim Berners — Lee யினது பெரும் தன்மையைக் காண்கின்றோம்.

World Wide Web Consortium என்னும் அமைப்பினால், இலாப நோக்கம் இல்லாத குழு ஒன்று, World Wide Web இணையத்தினது தராதரத்தைக் கண்காணிக்கின்றது. Berners — Lee இக்குழுவினரது அதிபர். இவர்கள் அமெரிக்காவினது (Massechusetts)

கப்பல் தாழ்ந்துவிடும் எனச் கூறினான். இப்போது நேரம் இரவு 11.40 மணி. கப்பலில் இருந்த 2,252 நபர்களுக்கும் போதுமான Life Boats (உயிர் காக்கும் படகுகள்) இருக்கவில்லை. மூழ்காத கப்பலாயிற்றே! ஓர் சம்பிரதாயத்திற்காக ஓர் சில படகுகளே கப்பலில் ஏற்றப் பட்டது புறப்படும்போது!! தனது பொறுப்பான கடைமையை உணர்ந்த கப்ரன், உடனேயே கப்பல் ஓடுவதை நிறுத்தி, படகுகளை இறக்கி, சிறுவர் சிறுமிகளையும் பெண்களையும் படகுகளில் இறங்கித் தப்பிச் செல்லுமாறு உத்தரவிட்டார். 705 பயணிகள் இறங்கினர்.

மீண்டும் இசை முழங்கவும், நடமாடுவோர் ஆடவும், பிரார்த் தனையில் ஈடுபட்டோர் பிரார்த்திக்கும் படியும் ஆணையிட்டார். கப்பல் கப்ரன்களது பாரம்பரிய வளக்கத்திற்கமைய, தனது Full Uniform (முழுச் சீருடை) அணிந்து, தனது கப்பலுடன் தானும் மூழ்க ஆயத்தமானார்.

பனிப்பாறையுடன் மோதிய இரண்டரை மணி நேரத்தில், இசை முழங்க, விளங்குகள் எரிய, கப்பல் இரண்டாக மத்தியில் பிரிந்துடைந்து 1,547 பேருடன் 3,800 மீற்றர் ஆழத்தில் மூழ்கியது.

உயிர் காக்கும் படகுகளில் இறங்கிய 705 பெண்களையும் சிறார்களையும், மறுநாள் அங்கு வந்த Carpathia (கார்பாத்தியா) -பொருத்தமான பெயர்-என்னும் கப்பல் காப்பாற்றியது.

விசாரணைகள் நடந்தன. பொறுப்பான காரணிகள் கிட்ட வில்லை. தீர்க்கமான எந்தவொரு முடிவுக்கும் வர இயலவில்லை. ஆனால், கப்பலைக் கட்டப் பாவிக்கப்பட்ட "உருக்கு இரும்பு" வட அற்லான்ரிக் சமுத்திரத்தில் திகளும் "கடும் குளிர் கொண்ட நீர்" கப்பல் இரும்பை இலகுவாகத் தெறிக்கும் (Brittle State) நிலைக்கு மாற்றியதால், சிறு மோதலையும் தாங்கிக்கொள்ள இயலாது போயி ருக்கலாம் என யூகிக்கப்பட்டது.

இதற்கிடையில், கப்பல் கட்டும் தொழிலாளர்களது மேற்பார் வையாளர் (Foreman) துக்கமும் அவமானமும் தாங்காது தற்கொலை செய்து கொண்டார்.

பிரான்ஸ், அமெரிக்க விஞ்ஞானிகள் 1985-ம் ஆண்டில் நீர் மூழ்கி ஆய்வுக்கூடம் மூலம், ரைரானிக் அமெரிக்காவினது Newfound-land (நியூபௌண்ட்லண்ட்) எனும் மாநிலக் கரையில் இருந்து, 650 கிலோ மீற்றர் தென்-கிழக்காக, 3,800 மீற்றர் ஆழத்தில், இரண்டாகப் பிளந்த நிலையில் இருக்கின்றது எனக் கண்டனர். ஆனால், மோதலால் ஏற்பட்ட அறிகுறியோ காயங்களோ காணப் படவில்லையாமே! 73 வருடங்களின் பின்னர் அடையாளங்கள் மறைந்திருக்கலாம் தானே!!

இரும்பு உருக்கு குளிரினால் தெறிக்கும் நிலைக்கு மாறியதால் பலவீனமடைந்திருக்கலாம் என்ற விஞ்ஞான ரீதியான விளக்கம் பார்த்தோம்: இப்போது, ஆவி உலக விளக்கத்தைப் பார்ப்போமா?!

> இயூஜீன் எம். டி. ஸில்வா என்பவர் 1960 களில் ஆய்வொன்றினிற்கு லண்டன் மியூஸியம் சென்றார். ரைரானிக் மூழ்கிய காலத்தில் லண்டன் மியூஸியத்தில் பணியாற்றிய நபர் ஒருவர் இயூஜீன் டி. ஸில்வாக்கு கூறிய கதையையே மேற் காண்பீர்கள்...
>
> ஆ০০০ர்

எகிப்து நாட்டில் 5.000 வருடங்கள் முன்னர் Pharaoh(பேறோ) மன்னர்கள் ஆண்டனர். இவர்கள் அல்லது இவர்களது குடும்பத்தினர் இறந்த போது. உடல்களைப் பதப்படுத்தி, மிக நீண்ட பன்டேஜ் துணிகளால் உச்சி முதல் உள்ளங்கால் வரை சுற்று சுற்றெண்டு சுற்றி, தங்க நகைகள், விலை மிக்க வைரக் கற்களிலான ஆபரணங்கள், வேறு பெறுமதிமிக்க பொருட்களுடன் Pyramids (பிறமிட்ஸ்) எனும் முக்கோண வடிவம் கொண்ட கல்லறைகளில் அடக்கம் செய்வது வளக்கம். இவ்வாறான உடல்களை Mummy (மம்மி) என அழைப்பர். சில பிள்ளைகள் தமது தாய்மாரை ''மம்மி'' என அழைப்பர். அதுவல்ல இது.

ஆங்கிலேயர் பலர் தமது ஆதிக்கத்தின் கீழ் படித்திருந்த நாடுகளில் சூறையாடுவது வழக்கமாக இருந்த காலம். சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் சில ஆங்கிலப் பிரபுக்கள் எதிப்து நாட்டினது பிரமிட்களைச் சூறையாடி, மம்மிகளையும் நகைகளையும் திருடிச் சென்று பெரும் தனவந்தர்களானார்கள்.

இவ்வகையான பிரபுக்களில் Lord Carnovan (லோட் கானொவன்) என்பவரும் ஒருவர். இவர் தனது சகாவான Carter (காட்டர்) என்பவரையும் பதினொரு உதவியாளர்களையும் அழைத்துச் சென்று, ஓர் பிரமிட்டை பலவந்தமாகத் திறந்து சூறையாடினார். அங்கு ஓர் மம்மி இருந்தது. ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது போன்று தோன்றியது அழகிய இளம் பெண். அவளது மம்மியை எடுத்து வெளியேறினர்.

வெளியேறியதும் சடுதியாக சூறாறளிக் காற்றடித்தது, ஆகாயம் முற்றிலும் மணல். தொடக்கமே சகுனப் பிழை போலத் தோன்றியது.

லண்டன் நகர் வந்தடைந்ததும், அங்குள்ள Museum (பல் பொருட்காட்சிச்சாலை) யில் பொது மக்களது பார்வைக்கு, ஓர் தனி அறையில், மம்மி வைக்கப்பட்டது. பெரும் திரலான மக்கள் முதல் நாள் பார்வையிட்டனர்.

அன்றிரவு மம்மி பெட்டியை காவல் செய்ய ஒருவர் நியமிக்கப் பட்டார். மறுநாட் காலை அவர் மர்மமான முறையில் இறந்திருக்கக் காணப்பட்டார்.

அன்றிரவு மம்மியினது அறையைப் பூட்டிவிட்டு, இரு காவலர் களை அறைக்கு வெளியே காவல் செய்யும்படி பணிக்கப்பட்டனர். நள்ளிரவில், மம்மியின் !அறைக்குள் யாரோ நடமாடும் சப்தம் கேட் டது ஒரு காவலர் சப்தத்தை ஆராய கதவைத் திறந்து உள்ளே சென்றார். வெலவெலத்த மற்றையவர் அங்கிருந்து ஓடியே சென்று விட்டார்

மறுநாட் காலையில் அறையினுட் சென்றவர் இறந்திருக்கக் காணப்பட்டார் காரணம் புரியவில்லை. மம்மியைப் பார்வைக்கு வைப்பதில்லை என முடிவெடுத்து, அதனது அறையைப் பூட்டி விட் டனர் அதிகாரிகள். இப்போ மம்மியை என்ன செய்வது! ஓரே குழப் பம்!! தலையைப் பிக்காத குறையாகச் சொறிந்து கொண்டனர் மியூ சியம் அதிகாரிகள்.

இந்நாட்களிலேயே ரைரானிக் தனது வெள்ளோட்டத்தை முடித் துக் கொண்டு, முதற் பயணத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. உலகிலேயே திறமான சொகுசுக் கப்பலினது முதற் பிரயாணத்தில் '' நானும் சென்றேன்'' என்ற பெருமைக்காக கோடீஸ்வரர்களும், பிரபல்ய பிரமுகர்களும், ஏனையோரும் தமது செல்வாக்கைப் பாவித் தும் முண்டியடித்தும் பயணச் சீட்டைப் பெறும் வேட்டைக் காலம்.

லண்டன் மியூசியத்தில் ஓர் மம்மி உள்ளதென ஓர் அமெரிக்க செல்வந்தர் அறிந்தார் இதனை தனது நாட்டினிற்கு இட்டுச் சென்று, பார்வைக்கு பல நகர்களில் வைத்துப் பெரும் பணம் பண் ணலாம் என எண்ணினார். மியூஸிய அதிகாரிகளை அணுகி 75' 000 அமெரிக்க டொலர்களுச்கு மம்மியை வாங்கினார்.

தலையிடி நீங்கிய மியூஸிய அதிகாரிகள் தமது செல்வாக்கைப் பாவித்து, இரண்டாம் பேருக்கும் தெரியாது, மம்மியையும் அதனது பெட்டியையும் வேறொரு பெரிய நீள் சதுரப் பெட்டியில் அடைத்து, அமைரிக்கா செல்வதற்கென ரைரானிக் கப்பலது சரக்கு வைக்கும் பகுதியில் ஏற்றிவிட்டனர். அவ்வளவுதான்!

அந்த அமெரிக்க செல்வந்தருக்கு என்ன ஆனது என்பது தெரி யாது. Lord Carnovan விபத்தொன்றில் இறந்தார். இவரைத்

தொடர்ந்து, ஏனைய உதவியாளர்களும் ஒருவர் பின்னர் ஒருவராக மரணித்தனர். ஆனால் Carter மட்டும் விதிவிலக்கு. அவர் பலகாலம் வாழ்ந்து, இயற்கை மரணம் எய்தினார்.

ரைரானிக் கப்பலில் மம்மி ஏற்றப்பட்ட விஷயம் தெரிந்தோர், பனிக்கட்டிப் பாறையில் மோதி மூழ்கிய கதையை நம்பவில்லை O

# சுத்தமானவன் போலி வேசக்காரனாம்

சில மாதங்களுக்கு முன்னர், யாழ், மகளிர் ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் பயிற்சி வகுப்பொன்று நடாத்தியது. பாடங்கள் ஆரம்பிக்க முன்னர், வண்ண வண்ண சேலைகளில், சிறு சிறு கூட்டங்களாக, வட்டமாகக் கூடி நின்று அளவளாவினர். பயிற்சியாளர்களான மகளிர்.

தத்தமது கைங்கரியங்களை விபரிப்பதில் ஆர்வம் காட்டியதால், ஒரே சமயத்தில் இருவர், மூவர் கதைப்பதும், ஏனையோர் ''நான் என்னத்தைச் சொல்லலாம?'', ''அவ சொன்னதுக்கு என்ன மறுத்தான் சொல்லலாம்,,, என்ற எண்ணங்களில் லயத்திருந்தனர்.

ஆனால், இவர்களுக்கு எதிர்மாறான ஆழ்ந்த சிந்தனை உள்ளோர், அவதானமாகச் சம்பாஷனையைக் கவனிப்போரும் அங்கு நின்றனர். ஓர் சிலர்.

''எங்களது அத்தான் (அக்காவின் கணவர்) இந்தப் புது வருடத்துடன் குடிப்பது, புகைப்பது போன்ற கெட்ட பழக்கங்களை ஒரேயடியாக விட்டுவிட்டார்''. எனச் சொன்னார் ஒருவர், பெருமிதத்துடன்.

அமைதியாகப் பேச்சினை அவதானித்த மற்றவர். ''மனிதனாகப் பிறந்தவனுக்கு ஏதாவது ஒரு சிறிய தீய பழக்கம் இருக்கத்தானே செய்யும். அவர் இப்ப என்னவாம் செய்கின்றார்?'', என வினவினார். முன்னையவர், சற்று தலையைக் குனிந்தபடி, ''வாஸ்த்தவம் தான்; இப்ப அக்கா கருத்தரித்திருக்கின்றா'', என்றார் ஈனக் குரலில்.

கேள்வி எழுப்பியவர், ''உதுக்காகத்தான், 'கடவுள்... சமயம்... நான்சுத்தமானவன்...' எனதம்பட்டம் அடிக்கும் கயவர்களை நான் ஒரு போதும் நம்புவதில்லை'', என அடித்துக் கூறிவிட்டு விருட்டென விலகிச் சென்றாள் அந்த மங்களகரமான மங்கை. o

''சந்திரன்'' மர்ஸலீன் அன்ரனி

குருநகர். யாழ்ப்பாணம்.

# 21 நொவெம்பர் 2000 - V. O. A. Science Report நிகழ்ச்சியில் இருந்து தொகுக்கப்பட்டது.

அமெரிக்கா வில் ''மினோசோற்ரா'' என்னும் மாநிலத்தில் 06 வயதான ''மொலி'' என்னும் பெண் பிள்ளை இருக்கின்றாள். அவளுக்கு ஓர் அபூர்வ வியாதி,

சாதாரணமாக எமது இரத்தத்தில் உள்ள மூன்று வகையான இரத்த உயிர் அணுக்கள் அவளது இரத்தத்தில் இல்லை. எமது எலும்புகளில் உள்ள ''ஊன்'' (Bone Marrow) இவற்றை உருவாக்குகின்றன.

இரத்தத்தில் இருக்கும் மூன்று ''உயிரணுக்கள்'' ஆவன:

(1) சுவாசப் பையில் சுத்திகரிக்கப்பட்ட இரத்தத்துடன் ''ஒக்ஸிஜன்''ய்(Oxygen) சகல பாகங்களுச்கும் கொண்டுசெல்லும் ''சிவந்த உயிரணு'' (Red Corposcles);

(2) உடலுக்குக் கேடு விளைவிக்கும் எதிரி அணுக்கள் (பக்ரீறியா/வைறஸ்) போன்றவற்றை உடனுக்குடன் அழித்தொழிக்கும் ''வெள்ளை உயிரணு'' (White Corposcles);

(3) உடலில் காயம் ஏற்பட்டால் இரத்தத்தை உறைய வைக்கும் ''உயிரணு'' (Pallettes), ஆகியவையே இம் மூன்று உயிரணுக்கள்.

இவை இல்லாத போது ஏற்படும் அவல விளைவுகளை நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கள்!

இப் பிள்ளையைக் குணப்படுத்த மருத்துவர் ஓர் ''எலும்பு ஊன் நன்கொடை அளிப்பவர்'' (Bone Marrow Donor) ஒருவரைத் தேடினர்.

இவ் நன்கொடை வள்ளல் கட்டாயமாக இப் பிள்ளையினது தாய் தந்தையினரிலிருந்து உருவாகிய சகோதரி சகோதரராக இருக்க வேண்டும் என்பது மருத்துவ நியதி. ஆனால், துர்வசமாக ''மொலி'' க்கு சகோதரர் இல்லை. அவள் ஓர் தனிப் பிள்ளை.

மருத்துவர் தாயிலிருந்து ஓர் முட்டையை எடுத்தனர். பின்பு, தந்தையிடமிருந்து ''கருவுண்டாக்கும் ஆண் தாது'' (Sperm) ஒன்றை முட்டையினுட் செலுத்தி கருவை உருவாக்கினர். யாவும் அவர்களது ஆய்வு கூடத்திலேயே நடைபெற்றது.

இதன் பின்னர், உருவாக்கிய கருவை. தாயினது கருப்பைக்குள் செலுத்தியதால், உரிய காலத்தில் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். இப் பிள்ளைக்கு "அடம்" (Adam) எனப் பெயரிட்டனர்'

பிறந்த பிள்ளையினது "கொப்பூழ்க் கொடி" யில் இருந்து ஓர் சில துளிகள் இரத்தத்தை எடுத்தனர். இதனால் பெற்ற தாய்க்கோ, பிறந்த குழந்தைக்கோ, எதுவிதமான நோவோ, வருத்தமோ இருக்கவில்லை.

எடுத்த இரத்தத்துளிகளை ஆய்வு செய்து இக் குடும்பத்தினரது "மரபுப் பண்பு" தொடர்வதற்கான காரணமாயிருக்கும் நுண் அணுவை (Gene) தேடினர். "எலும்பு ஊன்" இரத்தத்தினது மூன்று உயிரணுக்களை உருவாக்கும் Gene னைக் கண்டுபிடித்தனர்.

கண்டுபிடித்த Gene னை "மொலி" பிள்ளையின் எலும்பு ஊன் ல் செலுத்தினர்.

மூன்றாம் நாள் "மொலி" யினது "எலும்பு ஊன்" அவளது இரத்தத்தில் அத்தியாவசியமான அம் மூன்று இரத்த உயிரணுக்களையும் இயற்கையாகவே உருவாக்கத் தொடங்கியது.

இன்று அப் பெண்பிள்ளை சுகமாக வாழ்கின்றாள்.

30 ஆண்டுகளுக்கு முன்பு தென் ஆபிரிக்கா வினது Christian Barnard என்னும் இருதய சத்திர சிகிச்சை நிபுணர் முதன் முதலாக, இறந்தவரது பழுதடையாத இருதயத்தை பிறிதொரு நோயாளிக்குப் பொருத்தி மருத்துவ சாதனை படைத்தார்.

அது போன்று Molly யினது அறுவைச் சிகிச்சையும் ஓர் இக் கால மருத்துவச் சாதனையே!

சுந்தரமூர்த்தி சிவபாலன்
சங்கத்தானை, சாவகச்சேரி.

---

The boy's prayers; Our beer, which art in bottles, Hallowed by the sport, give us each day our daily schooners, and forgive us our spillage, as we forgive those who spillest against us, and lead us not into the practice of wine tasting, and deliver us from Tequila, for mine is bitter, the chicks and the footy forever and ever armen.

# காப்புறுதி

எமது 11 வது இதழான 2000 மாசி மாதம் வெளிவந்த சஞ்சிகையில் இக்கட்டுரை பிரசுரிக்கப்பட்டு, தொடர்ந்து வெளி வருகின்றது.

சென்ற இதழில் மட்டுமே, இடமின்மை காரணமாக, இத் தொடர் வெளிவரவில்லை.

பலராலும் வரவேற்கப்பட்ட இக் கட்டுரையை அச்சுவேலி அருளானந்தம் கிறிஸ்ரி எழுதியுள்ளார். இவர் காப்புறுதிக் கூட் டுத்தாபனத்தின் முன்னாள் உத்தியோகத்தர். தற்பொழுது இவர் யாழ். மத்திய கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக பணியாற்று கின்றார்.

## 8. பல் நலக் காப்புறுதி

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் அறிமுகப்படுத்தப் பட்ட மற்றும் ஒரு ஆயுட் காப்புறுதியாகவே பல்நலக் காப்புறுதி காணப்படுகிறது. இது இக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் அறி முகப்படுத்திய காப்புறுதி வகையினுள் உயர்ந்த அளவான நலன்களைக் கொண்டு காணப்படுகின்றது. இதன் பிரதான பண்புகள் வருமாறு;

1) 18—55 வயதிற்கு இடைப்பட்டவராக காணப்படல் வேண்டும்-
2) ஒப்பந்தப் பெறுமதி ரூபா 10,000 - 1 இலட்சம் இடைப்பட்ட தாக காணப்பட வேண்டும்.

3) விபத்துக் காரணமாக இறப்பரே ஆயின் வெகுமதியும் வழங்கப் படும்,

4) 10 வருட ஒப்பந்தம் ஆயின் 6 வருட முடிவில் 40% நட்டஈடாக வழங்கப்படும்.

5) அதே போன்று 15, 20, 35 வருட ஒப்பந்தம் ஆயின் முறையே 10, 12, 15 வருட முடிவில் 40% பெற்றுக்கொள்ளலாம்.

## 9. திருமணத்துக்கும், கலவிக்குமான ஆதாரக் காப்புறுதி

பெற்றோரின் எதிர்கால நீதிப் பொறுப்பினைத் தவிர்த்துக் கொள்வதற்காக அறிமுகப்படுத்திய ஒருவகை காப்புறுதியாகும். இங்கு பிள்ளைகளின் எதிர்கால திருமண கல்விக்கான நீதித்தேவையினை இலகுவான முறையில் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் பெற்றோர் தமது ஆயுளுக்கு காப்புறுதி செய்துகொள்கின்றன. இக் காப்புறுதிக்கான நட்டஈடு பின்வரும் அடிப்படையில் வழங்கப்படும்.

1) திருமணத்திற்கான ஆதார நிதிக் காப்புறுதி ஆயின் ஒப்பந்தத் தொகை ஒரே நேரத்தில் வழங்கப்படும்.

2) கல்விக்கான ஆதார நிதிக் காப்புறுதியாயின் 5 வருடங்களில் 6 மாதத்திற்கு ஒரு தடவை கட்டம் கட்டமாக நட்டஈடு வழங்கப்படுகின்றது.

## 10. வெளிநாடுகளில் வேலை புரிவோருக்கான இலவச ஆயுட்காப்புறுதி

வெளிநாடுகளில் வேலை புரிகின்ற உள்நாட்டவரின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமும், வெளிநாட்டு வேலைவமய்ப்புப் பணியகமும் கூட்டாக இணைந்து நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட ஒருவகை ஆயுள் காப்புறுதியாகவே இது காணப்படுகிறது. வேலை நேரங்களில் விபத்துக்கள் மரணம் ஆட்குறைப்பு போன்ற நடவடிக்கைகளின் ஊடாக தொழிலாளியின் நலன் பாதிப்படையுமேயாயின் அதற்காக நட்டஈடு வழங்கப்படும். இக் காப்புறுதி பின்வரும் பண்புகளைக் கொண்டு காணப்படுகின்றது

1) இக் காப்புறுதியின் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 50,000/- ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.

2) இக் காப்புறுதிக்கான மாதாந்தக் கட்டணம் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் நலன்புரி நிதியத்தின் ஊடாக செலுத்தப்பட்டு வருகின்றது.

3) வேலை நேரங்களில் விபத்து, ஆட்குறைப்பு மரணம் போன்ற வற்றின் ஊடாக ஏதாவது இழப்புக்கள் ஏற்படுமே ஆயின் அவற்றிக்கு நட்டஈடு வழங்கப்படும், அத்துடன் தொழிலாளி வெளி நாடுகளில் இறப்பரேயாயின் சடலத்தை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான செலவினையும் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பொறுப்பேற்கின்றது.

## "மினிமுத்து" (பூமாறக்ஷண்ய) ஆயுட் காப்புறுதித் திட்டம் (இலாபத்துடனும் இலாபம் இல்லாமலும்)

இத்திட்டம் குழந்தைகளின் நன்மை கருதியே வரையறுக்கப் பட்டுள்ளன. இக்காப்புறுதி இரண்டு ஆயுட்களை உள்ளடக்கியுள்ளன.

1) பிரேரணையாளர் (தந்தை, தாய் அல்லது எவரேனும் நெருங்கிய உறவினர்)

2) குழந்தை.

கீழ்க்காணும் சந்தர்ப்பங்களில் இக் காப்புறுதித் திட்டங்களில் கொடுப்பனவுகள் செய்யப்படும்.

1) காப்புறுதிக் காலம் முடிவடையுமுன்னர் பிரேரணையாளர் (தந்தை அல்லது தாய் அல்லது உறவினர் இறக்கும்போது)

2) காப்புறுதிக் காலம் முடிவடையுமுன்னர் குழந்தை இறக்கும் போது.

3) காப்புறுதிக் காலம் முடிவடையும் வரை குழந்தை உயிர்வாழும் போது

## "யஸ்ரிய" ஓய்வூதியக் காப்புறுதி

வாழ்க்கையின் பின்னடியில் எவர் கைகளிலும் தங்கியிராமல் யாவர்க்கும் ஓய்வுதியம் பெறக்கிடைக்கும் பாக்கியமே இக்காப்புறுதி யாகும். இன்றைய உழைப்பினர் ஓர் சிறிய பகுதியை நாளைக்காகச்

செலுத்தி ஓய்வூதியத்தைப் பெறுவதேயாகும். வருடாந்தம் அதிகரிக்கும் ஓய்வூதியத்தொகையுடன் இலாபப் பங்குத் தொகையும் வழங்கப்படும். 18 வயது தொடக்கம் 55 வயது வரையானோர் இத்திட்டத்தில் சேரலாம். ஓய்வுதியம் 55 அல்லது 60 வயதில் ஆரம்பிக்கும் ஒருவர் பெறவிரும்பும் ஓய்வூதியத் தொகையும், ஓய்வூதியம் பெற ஆரம்பிக்கும் வயதையும் அவரே தீர்மானித்தல் வேண்டும். மரணமடையுமிடத்து அது முதலாவது வருடத்தில் இடம் பெறின் செலுத்திய தொகை வழங்கப்படும். அதன் பின்னர் இறந்தால் வருடத்திற்கேற்ப பெருக்கங்களாக வழங்கப்படும்.

அடுத்த இதழில்:
''காப்புறுதியில் விரும்பிப் பெறக்கூடிய துணை அனுகூலங்கள் அல்லது நன்மைகள்'' ஆகியவற்றைப் பார்ப்போம்.

## ஆறுதலா? போதாத அனுபவமா?!

ஒப்பறேஷன் தியேற்ரறால், அரை நிர்வாணமாக, தன் வயிற்றைப் பிடித்தபடி, ஒருவர் ஓடுகின்றார். அவரைத் துரத்தியபடி, வேறு நிறம் அறியாத வெள்ளை யுனிபோர்மில் நேர்ஸ். செய்வதறியாது, கையுறைக் கையால், கதவைப் பிடித்த வண்ணம், எட்டிப் பார்க்கும் டொக்ரர். இதென்ன?!

ஒரு விதமாக நோயாளியை மறித்து, அணைத்து, விரைந்து வந்த மருத்துவமனை நிர்வாகியிடம் ஒப்படைத்தனர்.

''ஒப்பறேஷனுக்கு முகல் ஓடுகின்றீரே, ''உயிருக்கு ஆபத்தாச்சே'', என அறிவுறுத்தலுடன் வினவினார், மருத்துவமனை நிர்வாகி.

''ஒன்றுக்கும் பயப்படாதே யும், அப்பெண்டிக்ஸ் ஒப்பறேஷன் ஒரு சிறிய விஷயம், நூறு ஒப்பறேஷன்களைக் கண்டிருப்பேனே நான், என்று நேர்ஸ் சொன்னாளையா!'', என அங்கலாய்த்து ஆத்திரப்பட்டார் நோயாளி.

''இதென்னையா அநியாயம், உண்மை தானே...... எமது வைத்தியப் பிரிவினர் எவ்வளவு அனுபவசாலிகள்'', என பெருமையுடன் கூறிய நிர்வாகி, அமைதியாக, ''உம்மைச் சமாதானப் படுத்தத் தானே அப்படி நேர்ஸ் சொன்னாள்'', என்றார்.

''என்னையா சொல்லுறீர்'', என்றார் ஆத்திரத்துடன் நோயாளி, ''எனக்குச் சொல்லேலை ஐயா, டொக்ரருக்குத் தான் சொன்னாள் அந்த நர்ஸ்!'' ●

செல்வி ஜோதிகா ஜெகதீஸ்வரன்
பொறியியல் பீடம், பல்கலைக் கழகம், பேராதெனிய.

# கல்யாணி கிறீம் ஹவுஸ்

73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



ஐஸ் கிறீம் வகைகள்

- சொக்லட் கிறிப்ஸ்
- கல்யாணி ஸ்பெசல் ஐஸ் கிறீம்
- புருட்சலட் ஐஸ் கிறீம்
- வனிலா ஐஸ் கிறீம்
- சொக்லட் ஐஸ் கிறீஸ்
- ஜெலி ஐஸ் கிறீம்
- நட்ஸ் ஐஸ் கிறீம்

- மட்டன் றோல்,
- கட்லட்
- பற்றீஸ்
- கேக் மஸ்கட்
- பீடா

மற்றும் குளிர்பான வகைகள்
யாவற்றையும் சுவைத்து மகிழ
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

# வங்கி நடைமுறையும் அதன் கடன் வசதியும்

க. பாலசுப்பிரமணியம்,
பிரதேச முகாமையாளர்,
இலங்கை வங்கி,
பிரதேசக் காரியாலயம்,
யாழ்ப்பாணம்.

வே. ஐயம்பெருமாள்
முகாமையாளர்,
இலங்கை வங்கி,
2-ம் கிளை ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

இலங்கையின் தேசிய வங்கியாக 1939 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட "இலங்கை வங்கி" மக்களிடமிருந்து சேமிப்புப் பணத்தை வைப்புக்களாகத் திரட்டி, நாட்டின் அபிவிருத்தி நோக்கங்களுக்கான கடனாக வழங்குவதன் மூலம் அவற்றினது செயற்பாட்டை மேற் கொள்ளுகின்றன.

இலங்கை வங்கி தனது வைப்புக்களை நடைமுறைக் கணக்கு, சேமிப்பு வைப்பு, கால / தவணை வைப்புக்கள் மூலம் திரட்டுகின்றது. நடைமுறைக் கணக்கில் வைப்பிலிடப்படும் தொகை "கேட்டவுடன் செலுத்தும்" முறையில் ஏற்கப்படுவதால் இவ்வகை வைப்புக்கு வட்டி செலுத்தப்படுவதில்லை. "சேமிப்பு வைப்புக்கள்", வாடிக்கை யாளரின் வசதி கருதி பின்பரும் வகைகளாக ஏற்கப்படுகின்றன.

அவையாவன:-

## சாதாரண சேமிப்புக் கணக்கு

18 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இரு பாலார் யாவரும் இக் கணக்கை தனித்தோ கூட்டாகவோ ரூபா 500/- உடன் ஆரம் பிக்கலாம்.

## மகளிர் பொற்கணக்கு

18 வயதுக்கு மேற்பட்ட மகளிர் மட்டும் தனித்தோ கூட் டாகவோ இக்கணக்கை ஆரம்பிக்கலாம், இக் கணக்கிற்கு சாதாரண சேமிப்புக் கணக்கிற்கு வழங்கப்படும் வட்டியிலும் 1% கூடுதலாக வழங்கப்படும். ரூபா 500/- வைப்புச் செய்து பின்னர் மாதாந்தம் 250/- ரூபாவை கணக்கு நிலுவை ரூபா 10,000/- வரும் வரை வைப்புச் செய்யலாம். அல்லது ஒரே தடவையில் ரூபா 10,000/- வைப்புச் செய்வதன் மூலமும் இத்திட்டத்தில் இணையலாம்.

## சிறுவர் சேமிப்புக் கணக்கு

பராயமடையாத சிறுவர்களின் (ஆண், பெண் இரு பாலாரின்) பெயரில் அவர்களின் பெற்றார் அல்லது பாதுகாவலரினால் ரூபா 100/– வைப்புச் செய்வதன் மூலம் இத்திட்டத்தில் இணையலாம். இவர்கள் 18 வயதை அடைந்தவுடன் அவர்களுக்கு இப்பணம் பெறக் கூடியதாக இருக்கும். இக் கணக்கிற்கு சாதாரண சேமிப்புக் கணக்கிலும் பார்க்க 2% கூடுதலான வட்டி வழங்கப்படும்.

மேற்படி சேமிப்புத்திட்டங்களைவிட சேமிப்புச் சான்றிதழ், வைப்புச் சான்றிதழ், நிலையான வைப்புக் கணக்குகள் போன்றவை குறிப்பிட்ட கால அளவைக் குறிப்பிட்டு வைப்புச் செய்யப்படுகிறது (உ+ம் – 3 மாதம், 6 மாதம், 1 வருடம், 2 வருடம்)

இவற்றைவிட பின்வரும் சேமிப்புக் கணக்குகளை உள்ளடக்கியதாக குடும்ப சேமிப்புத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, பரிசுக் குலுக்கல் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| சிறுவர் சேமிப்புக் கணக்கு | சாதாரண சேமிப்புக் கணக்கு |
| மகளிர் பொற்கணக்கு | சேமிப்புச் சான்றிதழ் கணக்கு |

குடும்ப சேமிப்புத் திட்டத்தில் சேரவேண்டுமாயின்

1. தாய், தந்தை ஆகக் குறைந்தது. ஒரு பிள்ளை என மூன்று அங்கத்தவர்களுக்குத் தனித்தனி கணக்குகள் இருக்கவேண்டும்.

அல்லது

2. தாய், தந்தை இருவருக்கும் சேர்ந்து ஒரு கூட்டுக் கணக்கு, மூன்றாவது அங்கத்தவரான பிள்ளைக்கு அதன் வயதிற்குப் பொருத்தமான ஏதாவது வகைக் கணக்கு இருக்க வேண்டும்.

அல்லது

3. பெற்றோரில் ஒருவரை மட்டும் கொண்ட குடும்பமாயின், அந்தக் குடும்பத் தலைவரோடு அல்லது தலைவியோடு அவரது பிள்ளை ஒன்றிற்கும் தனித்தனி கணக்குகள் இருக்க வேண்டும்.

அல்லது

4. குழந்தைகள் இதுவரை இல்லாத குடும்பமென்றால் கணவருக்கும் மனைவிக்கும் கூட்டுக் கணக்கு/கணக்குகள் இருக்கவேண்டும்.

இலங்கை வங்கியின் " பொற்கணக்கு அதிஸ்டம்" எனும் மாபெரும் பரிசுச் சீட்டிழுப்பு மாகான ரீதியிலும் தேசிய ரீதியிலும் நடத்தப்பட்டு மிக கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படவுள்ளன. o

[அடுத்த இதழில் " இலங்கை வங்கி " யினது கடன் வசதிகளைப் பார்ப்போம்.

# ஏன்... எப்படி?!!

## (1) செல்வி யோ. தேவகி,

*2001 கணிதப்பிரிவு, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்நகர்.*

*ஆற்றல் சஞ்சிகையில் வெளிவந்த "இணையம்'' சம்பந்தமான தகவல்கள் எனது ஆய்விற்கு வழி வகுத்துள்ளது.ooo 'ஆற்றல் ''சஞ்சிகை என்றுமே மாணவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்கின்றது.*

*பதில்:-* புகழாரம் இனிமையாக உள்ளது. நன்றி. உமது மணி மணியான எழுத்துகளைக் கொண்ட, நீண்ட நன்றிக் கடிதம், பந்திகளாகப் பிரித்திருந்தால் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும். அவ்வகையாகப் பிரித்து இவ் இதழுடன் அனுப்புகின்றோம். பயனடையும். ''ஆற்றல்'' க்கு எழுதலாமே!

## (2) ச. புவனேஸ்வரன்,

*நீர்வேலி.*

*ஐக்கிய நாட்டு சபை எங்கு உள்ளது?*

*பதில்:-* இதன் தலைமையகம் அமெரிக்காவில் நியூ யோர்க் (New York) நகரில் எம்பயர் ஸ்ரேற் பில்டிங் (Empire State Building)ல் உள்ளது இக் கட்டிடத்தில் 102மாடிகள் உள்ளன. இவைகளைச் சென்றடைவதற்கு 64 உயர்த்திகள் (Lifts) உள்ளன. இவற்றில் சில தளத்தில் இருந்து ஓர் குறிப்பிட்ட மாடிக்கு கடுகதியில் (Express) மணிக்கு 30 மைல் வேகத்தில் சென்று, அதற்கு மேல் ஒவ்வோர் மாடியிலும் தரித்துச் செல்லும்.

United Nations Organization (ஐ. நா) வின் சில பிரிவுகள் வேறு நாடுகளிலும் உள்ளன, F A O இத்தாலியினது றோம் நகரில், I L O சுவிஸ்லாந்து நாட்டினது ஜெனீவா நகரில், U N O University யப்பான் நாட்டினது ரோக்கியோ நகரில் உள்ளன.

## (3) றிச்சட் பாலா வில்சன்

*யாழ்நகர்.*

*சில மேற்கு நாடுகளில், தஞ்சமடைந்த பிற நாட்டோரை அந்த நாட்டு மக்கள் சிலர் தாக்குகின்றார்களாமே! காரணம்?*

*பதில்:-* Germany, France, England (Scotland, Wales அல்ல) ஆகிய நாடுகளில் இத் துர்ப்பாக்கிய சம்பவங்கள் நடந்துள்ளன.

தோலின் நிறம் கறுப்பு. இதோர் காரணம். சென்றடைந்த நாட்டினது கலாச்சாரத்தைப் பேணாது; எமது கலாச்சாரமே தொன்மை வாய்ந்தது, பழமை வாய்ந்தது என இத்துப் போன பிரச்சாரத்தால் வெகுண்ட சில உள்நாட்டவர் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்,

Germany யில் இவர்கள் Adolf Hitler ன் Nazi Party (நாஜி கட்சி) யினது கொள்கைகளை இன்றும் கடைப்பிடிக்க விரும்புவோரே இத் தாக்குதல்களுக்கு முழுப் பொறுப்பு.

ஆனால், பெரும்பான்மை உள்நாட்டோர் சகிப்புத் தன்மையை பேணினாலும், உள்ளூர "நாம் இப் பிறநாட்டோரை இங்கு வர அனுமதித்தோம் ००० எமது சூழலை மாற்றியமைக்க அல்ல" என எரிச்சலுடன் பிறநாட்டோரை நோக்குகின்றனர்.

எமது கலாச்சாரத்தை எமது வீட்டினுள் பேணினால் குறைந்து போவோமா ! ?

## (4) சி. சிவயோகப்பிரியா,
உடுவில்.

24 மணி நேரமும் வேலை செய்வதைப் பற்றி உமது அபிப்பிராயம் என்ன?

பதில்;— ஒரு நாளில் 24 மணித்தியாலங்கள் உள்ளன. இவற்றில் 08 மணி நேரம் நித்திரைக்கு. வேலைக்கு போக, வர, வீட்டு வேலை, பொழுது போக்கு அம்சங்களைக் கவனிக்க 08 மணி நேரம். மிகுதி 08 இல் மதிய உணவுக்கு 01 மணித்தியாலம் போனால் மிகுதி 07 மணி நேரமே வேலை செய்ய வேண்டும் என ஓர் பண்புள்ள அதிகாரி எதிர்பார்ப்பார்.

ஆனால் நாம் எமது உரிமைகளை உறுத்திக் கொண்டு: வேலை நேரத்தில் அரட்டை அடிப்பதும், ஏனையோர் மனம் புண்பட சமய அரசியல் பிரச்சாரம் செய்வதும், வாய் விட்டுச் சிரிப்பதும், இவற்றால் வேலையில் கவனம் இல்லாது பிழைகள் ஏற்பட்ட பின்னர், தலையைச் சொறிந்து கொண்டு பல்லைக் காட்டி இளிச்சுப் பிளிச்சுக்கொண்டு குளைவதும் பண்புள்ளோர் செயலாக எனக்குத் தோன்றவில்லை.

## (5) தவமலர்,
கொட்டாஞ்சேனை.

பெண்களுக்கு சம உரிமை பற்றி சென்ற இதழில் பெரிசாய் விளாசினீர். பெண்களில் சாதனை படைத்த ஒருவரைப் பற்றிக் கொஞ்சம் கூறும்?

பதில்:- New York நகரில் World என்னும் பத்திரிகையை பிரசுரித்தார் Joseph Pulitzer என்பவர். இவர்: முதன் முதலாக ஓர் பெண்மணியை பத்திரிகை நிருபராக வேலைக்கு அமர்த்தினார். அப் பெண் நிருபரே Nellie Bly. துணிந்தவர். மாறு வேடத்தில் பல இன்னல்களுக்கிடையில் பல ஊழல்களை அம்பலப் படுத்தியவர். Jules Verne எழுதிய Round The World in 80 Days என்னும் கற்பனைக் கதையின் கதாநாயகன் பிரயாணம், செய்தவாறு விமானம் இல்லாத அக் காலத்தில், New York நகரில் இருந்து குறித்த நேரத்தில் தன்னந்தனியாக 14-11-1889 அன்று புறப்பட்டு 72 நாட்கள் 06 மணித்தியாலம் 10 நிமிடம் 11 வினாடியில் உலகத்தைச் சுற்றி 25-12-1890 அன்று வந்தடைந்தார். அப்போது இவருக்கு வயது 25 மட்டுமே. இச் சாதனை இன்றும் உளது.

## (6) அ. ஜெயராசா,
அச்சுவேலி.

வயதுபோன கிழடுகள் ஏன் சும்மா வீட்டில இருக்காமல் சமூக சேவை எண்டு அலையுதுகள்?

பதில்:- அவர்கள் அலைவதால், சேவையில் ஈடுபடுவதால் உமக்கென்னையா கஸ்டம் அல்லது நஸ்டம்? உமது எரிச்சல் கலந்த இயலாமையை வெளிப்படுத்திறீரே! அவமானம் !!

## (7) ப. கெ. பகீரதன்,
உரும்பிராய்.

இளமையை இழந்து, வயதில் முதிர்ந்து, உடல் நலிவுறும் நபரது மன நிலை எப்படி இருக்கும்?

பதில்:- நீர் பின்னொரு காலம் எய்தும் நிலையில் நான் இப்போதுள்ளேன் இதைப் பாரும் ''வயதென்பது எனக்கு பசுமையான அல்லது பசுமையற்ற உணர்ச்சிகளைத் தருவதில்லை' எந்த வயதிலும் ஒருவர் பிறருக்குக் கவர்ச்சியாகத் தோன்றுவர். அல்லது வெறுப்பை ஏற்படுத்துவார். எப்படியாயினும், இளமையாக இருப்பதோ முதுமையை எட்டுவதோ குறிப்பிட்ட அல்லது பிறர் எதிர்பார்த்த உணர்ச்சிகளையோ எனக்குத் தருவதில்லை''

அந்த காலத்தில் பெரும் புகழ் ஈட்டி, பலரால் மதிக்கப்பட்டு முதுமையிலும் சுறு சுறுப்பாக இயங்கிய முன்னாள் Holywood நடிகை Katherine Hepburn கூறியதையே மேல் தந்தேன்.

(08) றேவதி பாலேந்திரன்,
உரும்பிராய்

உங்களுக்குக் கேள்விகள் எழுத்து மூலமாகவா கிடைக்கின்றன?

பதில்;– கடிதங்கள் மூலமாகவும் வருகின்றன. சில நேரடியாகக் கேட்கப்படுகின்றன. வேறு சில, சிலருடன் உரையாடும் போது உதிர்கின்றன; நான் ஒரு லூஸ் அம்மணி!

(09) ச. சிறிதரன்
அரியாலை

மிலேனியம் தொடங்குவது இவ் வருடமா அல்லது 2001–ம் ஆண்டிலா?

பதில்:– எந்த மிலேனியம்? சரி, குதர்க்கம் வேண்டாம். பொதுவாக சகலரும் 2000–ம் ஆண்டையே மிலேனியம் என்கின்றனர். இதில் சர்ச்சை என்னவென்றால், 21–ம் நூற்றாண்டு தொடங்குவது எப்போது என்பதே. இவ்வாண்டா? 2001–ம் ஆண்டிலா? பின்னையதே சரி.

(10) பா: பானுமதி
கோண்டாவில்

சென்ற நூற்றாண்டினது சிறந்த மனிதன் யார்?

பதில்:– Time சஞ்சிகை Albert Einstein னையே தேர்ந்தது. தேர்வு பொருத்தமானதாகவே எனக்குத் தோன்றுகின்றது. இவர் ஒரு யூத இனத்தவர். Nazi Germany யில் Adolf Hitler யூதரை இம்சைப்படுத்திய காலம். 07 மிலியன் யூதரை கொன்றழிக்க வழி வகுத்த காலம்.

Einstein னது சொத்துக்களை அரசாங்கம் பறிமுதல் செய்தது. German University யில் பேராசிரியராகப் பணிபுரியத் தடை விதித்தது. அயல் நாடான Austria மூலம் தப்பியோடி America சென்றடைந்தார். தனது Theory of Relativity மூலம் அணு குண்டு தயாரிக்க வித்திட்டார். கணிதத் துறையினது Nobel Prize இவருக்கு வளங்கப்பட்டது. மாமேதை என சகலராலும் போற்றப்பட்டார்.

இவரது குழந்தைத் தன மனதைப் பாரும். இவர் அமெரிக்காவில் Princeton University யில் பேராசிரியராக பணிபுரிந்த காலத்தில் இவரது வீட்டிற்கு ஓர் சிறுமி வந்தாள்.

தனக்கு கிழமைக்கு ஒரு நாள் கணிதம் சொல்லித் தரும்படி வேண்டினாள். எவ்வளவு தருவாய் என பதிலுக்குக் கேட்டார். வாராவாரம் தனக்குக் கிடைக்கும் ஒரு டொலர் செலவுப் பணத்தில் 75 சதத்தைத் தருவதாகச் சிறுமி கூறினாள்

வாராவாரம் பாடங்கள் நடந்தன. வாராவாரம் 75 சதம் கொடுக்கப்பட்டது. மாதங்கள் ஓடின. இருவரும் பாட நேர ஒரு மணித்தியாலத்தை விரும்பி எதிர் பார்த்தனர்.

கணிதப் பேராசிரியரிடம் தனது மகள் பாடம் கேட்கின்றாளே என அதே பல்கலைக் கழகத்தில் சாரதியான தந்தை ஓடோடி வந்து மன்னிப்புக் கேட்டார்.

அதற்கு ஈன்ஸ்ரைய்ன் மன்னிக்க ஒன்றும் இல்லை, அவளது பாட நேரம் எனக்கு மனரம்மியமாக இருக்கின்றது, என்றார்.

ஆனால் கிழமைக்கு 75 சதமே உங்களுக்குக் கொடுப்பனவு என்பதை நினைக்கும் போது தான் மனவருத்தமாக உள்ளது என தந்தை தயங்கிக் கூறினார்.

அது பிழை. ஓர் ஸ்தாபனமோ அல்லது தனி நபரோ தனது மொத்த வருமானத்தில் 75 வீதத்தை எனது ஒரு மணித்தியால வேலைக்கு ஒருபோதும் எனக்குத் தரவில்லை. தயங்காது அவளை என்னிடம் அனுப்புங்கள் என்றாராம் அல்பேட் ஈன்ஸ்ரைய்ன்.

## (11) சி. மேறிஸ் கொலஸ்ரிக்கா,
யாழ் நகர்

சென்ற இதழில் ஆபிரிக்க நாடான Ivory Coast ல் பதில் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றவர் அந் நாட்டுக்கு ஓர் வரப்பிரசாதம் என்று பெரிசாய் ஈக்கில் விட்டீரே! இப்போது என்ன புளுகப்போறீர்?

பதில்:- அடி அம்மா, அதை எழுதிய போது நிலைமை அப்படித் தான் இருந்தது. BBC நிருபர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டபோது இவரது தகப்பனாரும், எமது அச்சகமான ''முல்லை அச்சகம்'' உரிமையாளரும், படுகாயமடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டதால், சென்ற இதழ் தவிர்க்க இயலாது இரு மாதங்கள் பிந்தி வெளிவந்ததே காரணம் எமது தடுமாற்ற நிலைக்கு.

மேலும், பதவியேறியதும் மனம் மாறி, விதிகளை மாற்றி தாண்டவம் ஆடுவார் என்று யார் கண்டார்! மன்னிக்கவும்!!

(12) ப. குகராஜா,
கோண்டாவில்

ஓர் சமயத்தில் கடவுளை வழிபடுபவர் தனது சமயமே சரி யென அடித்துக் கூறி வாதாடுவோரைப் பற்றி என்ன நினைக் கின்றீர்?

பதில்:- பரிதாபப்படுகின்றேன்! சிலர் மதம் மாறுகின்றார்கள். அவர்களது அறிவின்படி அது சரியாகலாம். மத மாற்றம் அவர்களது பரிபூரண சமயச் சுதந்திர உரிமை. இதை எவரும் மறுக்க முடியாது.

மதம் மாற முன்பு தாம் இருந்த சமயம் தான் சரி என்ற காலம் போய் புதிய சமயம் தான் சரி என்னும் அவர்களது துருவி ஆராய்ந்த அறிவினால் ஏற்பட்ட மனமாற்றம். வரவேற்கலாம்.

ஆனால், ஏனைய சமயங்கள் யாவும் பிழை எனவும், எந்தச் சமயத்திலும் உள்ள குறை குற்றங்களைப் பிரஸ்தாபித்து ஏனை யோரது மனங்களைப் புண்படுத்துவதை அறிவும், பண்பும் உள்ளோர ஏற்றுக்கொள்வார்களா? சிந்தியுங்கள்!

(13) ஏ. இந்திராணி,
அச்சுவேலி

பதின்மூன்று ''ஆற்றல்'' இதழ்கள் அகன்ற வடிவத்தில் வெளி வந்தன. ஆறு மாத ஸ்தம்பித்த நிலைக்குப் பின்னர் வடிவ வமைப்பு மாறி இலக்கம் 01 என வெளிவரக் காரணம்? எமது சந்தா கட்டணம் புதிய அமைப்பில் செல்லுபடியாகாதா? என்ன திருகுதாளமா போடுகின்றீர்?

பதில்:- ஆறு மாதம் இடம்பெயர்வு!! இலக்கக் குறையானது எனது தடுமாற்றமே! மன்னிக்கவும். இப்போது 15 ஆக திருத்தி யுள்ளோம்! பயப்படாதேயும், சந்தா கட்டணம் காலாவதியாகும் வரை ''ஆற்றல்'' தவறாது உங்களிடம் வந்து சேரும்!!

(14) ம. செ. சபாநாயகம்,
மாலி சந்தி, கரவெட்டி

காப்புறுதியை வர்த்தகர்கட்குப் புரியும் வகையில் ''ஆற்றல்'' மூலம் விளக்கவும்.

பதில்:- தங்களது கடிதத்தை யாழ் நகர் காப்புறுதிக் கூட்டுத்தாபன முகாமையாளருக்கு அனுப்பி அவரிடமிருந்து கட்டுரை ஒன்றினைக் கோரியுள்ளோம். கிடைத்ததும் பிரசுரிப்போம்.

(15) மா. பாலசுந்தரி,
2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

கிறிஸ்மஸ் பாப்பா வினது கதை என்ன?

பதில்:- கிறிஸ்து நாதர் பிறந்த நாளைக் கொண்டாடுவதே கிறிஸ்மஸ் பண்டிகை. இப் பண்டிகையை மையமாகக் கொண்டு பல கவிதைகள், பாடல்கள், கதைகள், கதாபாத்திரங்கள் கற்பனையில் உருவாகின.

இவ்வாறாக கற்பனையில் உருவான கதாபாத்திரமே Santa-claus (ஸான்ரக்லோஸ்).

ஓர் வெள்ளைத் தாடியுடன் மின்னும் கண்களுடன், உயர்ந்த பருமனான உடல் உருவைக் கொண்ட கிழம் மனிதனது சிரிப்பின் போது குலுங்கிக் குலுங்கி எமக்குச் சிரிப்பூட்டும் பருமனான வயிற்றைக் கொண்டவரே ஸான்ரக்லோஸ்.

Clement Clarke Moore என்பவரின் கற்பனையில் 23 டிஸெம்பர் 1823-ம் ஆண்டு உதித்த கதாபாத்திரமே ஸான்ராக்லோஸ். இவர் கிறிஸ்மஸ் பண்டிகை நாளுக்கு முதன் நாள் இரவு வீடுகளின் புகைக் கூண்டு வழியாகப் புகுந்து சிறார்களது காலுறைகளில் (Socks) பரிசில்கள் வைத்துச் செல்வாராம்.

இக் கற்பனையின் பின்னணிக் கதையும் ஒன்றுண்டு.

துருக்கி நாட்டில், யற்ராறா நகரத்தில் பிறந்து, 19-ம் வயதில் கத்தோலிக்க குருவாகி, மைறா நகரில் ஆயராக (Bishop) கடைமை புரிந்து, கி. மு 300-ம் ஆண்டில் இறந்தவர் அர்ச்சசிஸ்ட நிக்கலஸ் (Saint Nicholas) என்னும் தூய்மையானவர்.

இவரது காலத்தில், ஓர் வறுமையில் வாடும் கனவான், (Lord) தனது வளர்த்த மூன்று மகள்மாரையும் திருமணம் செய்து கொடுக்க இயலாது மனம் வாடியிருந்தாராம்.

இவரது வீட்டினுள் மூன்று பண முடிச்சுகளை St. Nicholas யாருக்கும் தெரியாது எறிந்து விட்டுச் சென்றாராம். மூன்று பெண்களுக்கும் திருமணம் செய்து இனிதே வாழ்ந்தனராம். கனவானும் மனச்சுமை நீங்கி அமைதி கொண்டாராம்.

இரகசியமாக நன்மை செய்யும் St. Nicholas என்பவரது பெயர் காலப் போக்கில் Santaclaus ஆக திரிபு பெற்றது. முற்றும் ●

# மக்கள் வங்கி

உங்கள் வாழ்நாள் முழுவதும் நிழல்போல்
உங்களைத் தொடர்ந்துவரும்
"மக்கள் வங்கி"

மக்கள் சேவையில் **40** ஆண்டுகளைத்
தாண்டிவிட்டது!!!

- *60 இலட்சம் வாடிக்கையாளர்கள்!!*
- *400 ற்கும் மேற்பட்ட கிளைகள்!!*

*இந்த உன்னத நம்பிக்கைப் பிணைப்பில்*
*நீங்களும் சேருங்கள்!!!*

*வங்கியின் வழமையான சேவைகளுடன்*

* *பாடசாலை மாணவர்களுக்கான விசேட சேமிப்புத் திட்டம் "மாணவர் மலர்ச்சி"*
* *மகளிருக்கான திட்டம் 'மகளிர் அதிர்ஷ்டக் கணக்கு'*
* *ஆசிரியர்களுக்கான விசேட வைப்பு மற்றும் கடன் திட்டம் "குருசெத"*
* *சுகாதார சேவையிலுள்ள தாதியருக்கான விசேட வைப்பு மற்றும் கடன் திட்டம் "சுவசெவன"*
* *தொழில் அற்றோர் சுயதொழில் தொடங்குவதற்கான திட்டம் "சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்"*
* *முதியோருக்கான திட்டம் "மூத்த பிரஜைகள் யாத்திரைக் கணக்கு"*
* *வருடந்தோறும் சேமிப்புக் கணக்குகளுக்கு அதிர்ஷ்ட லாபப் பரிசு வழங்கும் திட்டம்*

*இன்னும் பலப்பல திட்டங்கள்*
*அனைத்தும் உங்கள் வளர்ச்சிக்கே!!!*

*இலட்சோப லட்சம் மக்களின் வங்கியாகிய மக்கள் வங்கியின்*
*வாடிக்கையாளராகி நலம் பல பெறுவீர்!!*

மக்கள் மனமறிந்த வங்கி **"மக்கள் வங்கி"**

*பிரதேச தலைமை அலுவலகம்*
*யாழ்ப்பாணம்.*

# சானுகா ஜுவல்லர்ஸ்

அழகு நகைகளின் அரங்கம் சானுகா

SHANUGA JEWELLERS

200 G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**200 G, Kasthuriyar Road,**
**Jaffna.**

# க. கு. கந்தையாபிள்ளை
அன் சன்ஸ்

உங்களுக்கு தேவையான சகலவிதமான
பலசரக்கு பொருட்களையும் ஒரே இடத்தில்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
கொள்வனவு செய்ய நாடுங்கள்.

K. K. Kanthaiyapillai & Sons

No: 318, (124), Hospital Road,
Jaffna.

இதே மாநிலத்தில் சென்ற வருடம் Stc phens என்னும் கிறீஸ்தவ பாதிரியாரும், அவரது இரு சிறிய பிள்ளைகளும், அவர்களது மோட்டார் வாகனத்துள் வைத்து உயிருடன் எரித்துக் கொலை செய்யப்பட்டனர். இப் பாதிரியார் Australia நாட்டைச் சேர்ந்தவர். வறிய இந்திய மக்களுக்கு சேவை செய்வதால் மதப் பிரச்சாரம் செய்தார் என்பதே இவரது குற்றம்.

இக் கொலையை நடாத்திய கும்பல், குஜராத் மாநிலத்தில் ஓர் கிறீஸ்தவ கன்னியர் மடத்தினுள் புகுந்து, 13 கன்னியாஸ்திரிகளைக் கற்பழித்துச் கோரமான முறைகளில் கொலை செய்தனர். இக் கொலைகள் யாவும் கடவுளின் பெயரினாலேயே நடத்தப்பட்டன. கட்டடங்கள் கொள்ளை இலாபத்தை எதிர்பார்த்து, பலம் குறைந்தவைகளாக காட்டியதும் எப்பாரிய சேதத்திற்கும் ஒரு காரணம் எனவும் கூறுகின்றனர்.

(5) Auswitch, Poland: போலந்து நாட்டினது ''ஒஸ்விச்'' என்னும் இடத்தில் யூத இனத்தைக் கொன்றழிக்க, ஜெர்மன் நாட்டு சர்வாதிகாரி அடொல்ப் ஹிற்லர், பெரிய முகாம் ஒன்றினை அமைத்தான். இறந்த மக்களது உடல்களை எரித்தழிக்க சூளை உலைகளையும் உருவாக்கிளான். இங்கு சுமார் 7,000,000 யூத இன மக்கள் நச்சு வாயுவினால் கொல்லப்பட்டு எரித்தழிக்கப் பட்டனர்.

இந்த இனத் துவேஷம் மீண்டும் ஜெர்மனியில் வராது தடுப்பதற்காக Auswitch ல் வருடாந்தம் ஜனவரி மாதத்தில் ஞாபகார்த்த துக்க தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

(6) U S A Presibential Election (ஐக்கிய அமெரிக்கா ஜனாதிபதி தேர்தல்): 2000-ம் ஆண்டு இறுயில் தொடங்கி பதினெட்டு மாதங்களாக, Albert Gore (அல் கோர் என சுருக்கி அழைக்கப்படுபவர்) ஜனநாயக கட்சியின் சார்பில் பிரச்சாரம் செய்தார். இவரே அன்றைய உப ஜனாதிபதி.

இவருக்கு எதிராக குடியரசு கட்சியின் சார்பில் Georg: W Bush (ஜோர்ஜ் புஷ்) போட்டியிட்டார். இவரது தந்தை George Bush எட்டு வருடங்கள் முன்னர் ஜனாதிபதியாக பதவி வகிக்கும் போது, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு, Bill Clinton இடம் தோல்வி கண்டவர்.

ஐக்கிய அமெரிக்காவினது ஜனாதிபதி தேர்தல் சற்று விசித்திரமானது ஐம்பது மானிலங்கள் உள்ளன. ஒவ்வோர் மானிலங்களிலும் சனத்தொகைக் கேற்ப Electoral College (தேர்தல் கல்லூரி) வாக்குகள் மாறுபடும்.

எவருக்கு பொது மக்களது வாக்குகள் பெரும்பான்மையாகக் கிடைக்கின்றதோ, அம்மாநிலத்தினது "தேர்தல் கல்லூரி வாக்குகள்" முழுமையாக அவ் வேட்பாளருக்கே சேரும். அதிகமான தேர்தல் கல்லூரி வாக்குகள் பெற்றவரே வெற்றி அடைவார்.

இம்முறை, 43 வது ஜனாதிபதிக்கான இரு வேட்பாளர்களிடையே கடும் போட்டி நிலவியது.

கடைசியாக Florida (ப்ளொரிடா) மாநிலத்தில் வாக்குகள் எண்ணப்பட்டன. வாக்குகள் எண்ணும் மெஷின்கள் பழுதடைந்தன கையால் எண்ணும் போது சரியான வாக்குகள் பிழையான வேட்பாளர்களுக்குச் சேர்க்கப்பட்டது. ஆயிரக் கணக்கான கறுப்பு இன வாக்குகள் எண்ணப்படவில்லை. ஒரே குளறுபடி இம் மாநிலத்தினது ஆளுநர் (Governor) George Bush ன் இளைய சகோதரரான Jetf-Bush என்பவரே.

Bush வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டது. Al Gore மாநில நீதிமன்றில் வாக்குகள் தவறாக எண்ணப்பட்டன என வழக்குத் தொடுத்தார். வாக்குகளை கையினால் எண்ணும்படி பணிக்கப்பட்டது.

குறித்த தினத்திற்குள் கோடிக் கணக்கான வாக்குகளை எண்ணி முடிக்க இயலாது என Bush தேசிய உயர் நீதி மன்றில் (Supreme-Court) வழக்குத் தொடுத்தார். இதனை எதிர்த்து Al Gore ம் எதிர் வழக்கைப் பதிவு செய்தார்'

Florida மாநிலத்தில் 26 தேர்தல் கல்லூரி வாக்குகள் உண்டு ஏனைய மாநில தேர்தல்களில் Al Gore 24 வாக்குகளால் முன்நிலையில் நின்றார். ப்ளொறிடா மாநிலத்தில் பொது மக்களது வாக்குகளில் 537 வாக்குகளால் George Bush முன்நிலையில் நின்றார்.

மாநில நீதிமன்றங்களிலும் தேசிய உயர் நீதிமன்றங்களிலும் 36 நாட்கள் வாதம் நடந்தது. ஒருபோதும் அமெரிக்கா காணாத நிலை.

கடைசியாக Al Gore, "எமது வாதங்களை நாம் விட்டுக் கொடுக்காத போதும், எமது கட்சிக்கான கடமையிலும் பார்க்க தேசத்திற்கான கடமையை நாம் பெரிதாக மதித்து, தேர்தல் தோல்வியை ஏற்றுக்கொள்கின்றேன்", என அறிவித்தார்.

இரண்டு தேர்தல் கல்லூரி வாக்குகள் பெரும்பான்மையால் George W. Bush 43 வது ஜனாதிபதியாக 2001 ஜனவரி 20-ம் திகதி பதவியேற்றார்.

(7) அமெரிக்கா: ஜனாதிபதி Bill Clinton: 2000ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டிய George Bush இவ் வருட ஜனவரி மாதம் 20ம் திகதி பதவியேற்றார். இதற்கு முதல் நாள் 19-ம் திகதி Clinton பகிரங்கமாக மன்னிப்புக் கோரினார்.

Monica Lewinsky என்னும் தனது "வெள்ளை மாளிகை" உதவியாளரான இளம் பெண்ணுடன் பாலியல் உறவு கொண்டார் என செனற்சபையில் வழக்கு விசாரணை நடந்தது. "உண்மை கூறு வேன்" என சத்தியபிரமாணம் எடுத்த பின்னரும், பொய் கூறி குற் றத்தை மறுத்ததற்காவே மன்னிப்பு கோரினார்.

இவருக்கு 25,000 டொலர் தண்டனையும், சட்டத்தரணியான இவர் 05வருடங்களுக்கு தொழில் செய்யத் தடையும் விதிக்கப்பட்டது. ஆனால், "பொய்' கூறிய குற்றத்திற்கு மன்னிப்பு"ம் வழங்கப்பட்டது.

இவரது நெருங்கிய சகாவான James McDougal சட்டங் களுக்கு புறம்பான தேசிய கடன்களைப் பெற்று Whitewater என்னும் நிலப்பரப்பை மேம்படுத்திய குற்றத்திற்காக 03 வருட சிறைத் தண்ட னையும், 4'300,000 டொலர் அபராதமும் பெற்றார். இனம் இனத்தையே சாரும்!

Clinton ஜனாதிபதியாக பதவி வகிக்கும் காலம், Paula Jones எனும் கறுப்பு இன ஆபிரிக்கா அமெரிக்க பெண்ணுக்கு 850,000டொலர் வழங்கினார். இப்பெண்ணுடன் தகாத முறையில் நடந்து கொண்ட தற்கான வழக்கில் இருந்து தப்பினார் இத்தொகையைக் கொடுத்து பெரும் செலவான விவகாரம் இவரது தொடர்புகள்!

பதவியை அடுத்த ஜனாதிபதியிடம் கையளிப்பதற்காக ஓர் சில மணித்தியாலங்களுக்கு முன்னர், ஜனவரி 20-ம் திகதி காலை, சுமார் 200 நபர்களுக்கு "ஜனாதிபதி மன்னிப்பு" வழங்கினார்.

இவர்களில் ஒருவர் நியூயோர்க் (New york) நகரில் பணம் சம்பந்தமான 48 குற்றங்கள் சுமத்தப்பட்டவர். இவர் தனது மனைவி யுடன் நாட்டை விட்டு ஓடி இப்போது Switzerland ல் வசிக்கின்றார்.

பின்னர் தெரிய வந்த விஷயம் என்னவென்றால் Clintonனது ஜனநாயக கட்சிக்கு இந்த நபர் பல கோடி டொலர்களை அன்பளிப் புச் செய்தவராம்.

Clinton னது மனைவி Hillary Rodham Clinton ஓர் சட்டத் தரணி. சென்ற தேர்தலில் நியூயோர்க் நகரில் இருந்து செனற்சபை அங்கத்தவராக ஜனநாயக கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரது சுயசரிதைக்கு 8000,000(மில்லியன்) டொலர் கொடுக்கப்படும். ஆனால் இதில் அவரது முதல் விவாகம் விபரிக்கப்படமாட்டாதாம். o

''கோரைப் புல்லினது Botanical Term என்ன?'', என வினவினார்.

மற்றவர், சற்றும் தாமதியாது, ''றோடோரம், சைடோரம்'', என்றார்.

முன்னையவர், ''ஆகா, என்ன அறிவு!'', என புகழாரம் சூட்டிச் சென்றார்.

ஆனால், அவர் சொன்னது இது தான்: Road ஓரம் Side ஓரம். அப்படித் தானே கோரைப் புல் வளர்கின்றது?!

---

## T. R. நடராசா எமக்குச் சொன்னது

---




ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்

SRI MURUGAN

TELECOMMUNICATION SERVICE

Computer Service Agency Post office

☎ 021—2670, 021—3214, 021—3588

FAX: 021—3214

o பக்ஸ் வசதி

o போட்டோ பிரதி

o கவரிடுதல்

o ரைப்பிங்

( தங்குமிட வசதிகள் உண்டு )

303, K. K. S. Road, Jaffna.

# "ஆற்றல்" விற்பனை ஊக்குவிப்பு

இச் சஞ்சிகையை நாம் ஓர் சமுதாய சேவையாகவே வெளியிடுகின்றோம். இதனை வெளியிடுவதில் ஈடுபட்டோர் ஊதியம் ஏதும் பெறுவதில்லை. அத்துடன் பண இலாபம் எமது நோக்கமல்ல.

இக் காரணங்களினாலேயே இச் சஞ்சிகையை மலிவான விலையில் விநியோகிக்கின்றோம்.

நாம் எமக்கு "அச்சிடும் காகிதம்" தந்தோருக்கும், அச்சிட்ட அச்சகத்தாருக்கும, காலம் தாழ்த தாது, கொடுப்பனவுகள் செய்யவுள்ளது. இதனால், கீழ்க்கண்ட தள்ளுபடிகள், பிரதி ஒன்றிற்கென, எமது ஊக்குவிப்புத் திட்டம் அமைந்துள்ளது:

(1) முறபணம் செலுத்தி "ஆற்றல்" பெறுவோர்க்கு, பிரதிக்கு ரூபா **2/=**

(2) 10 நாட்களுக்குள் பணம் செலுத்துவோர்க்கு, பிரதிக்கு ரூபா **1/=**

விற்பனைப் பணத்தை "மணி ஓடர்" காசுக் கட்டளை மூலம் அனுப்பலாம்.

ஊக்குவிப்பு தள்ளுபடி, காசுக்கட்டளையினது தரகுப் பணம், தபால் செலவு ஆகிய சகலதையும் கழித்தெடுத்த பின்னர், மிகுதித் தொகையை மட்டும் மட்டமாக எமக்கனுப்புங்கள்.

காசுக்கட்டளை விண்ணப்பப் படிவத்தில் இவற்றைக் குறிப்பிடுங்கள்:

பணம் கொடுக்கப்படவேண்டிய இடம்:

சுண்டிக்குழி

பணம் பெறுபவரின் பெயர்:

ஆற்றல் ஆசிரியர்.

நன்றி, ஆசிரியர்.

இப்பிரசுரம் Readers and Listeners Combine அமைப்பினர்க் காக: 402, பிரதான வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணத்திலுள்ள "Bastian" அச்சகத்தினரால் 19-02-2001 வெளியிடப்பட்டது.